46

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
பரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஹு ஜூன் மீ 23உ [No. 25

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 481
2. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T. 483
3. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - சுயம்வரகாண்டம் 484
4. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 3. களம் 2 & 3.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 486
5. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.,B.L. 488
6. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (சிறுபறைப் பருவம்) கி. வெங்கடசாமி ரெட்டியார் 490
7. கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 492
8. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 495
9. அட்டவணை 489

## கலாநிலயம்

### வித்தகமோ விதிவசமோ. 17.

ஆதலின், தெள்ளியராகுந்திறத்தினைத் திருவள்ளுவர் ஊழின் ஆட்சியின்கீழ் அடக்காமல் விலக்கிவிட்டார் என்பதல்லால் 'ஊழ்' என்னும் அதிகாரத்தின் உட்கருத்தை உணர்வதற் கியலாமை, சென்ற நாள் உரைத்தவைகளால் தேரப்பெறும். செல்வஞ்செய்வதென்னுமத் தொழிலில் ஈடுபட்டவர்க்குரிய உண்மையை மட்டுமே இவ்வதிகாரம் உரைக்கின்றதென்பதற்கு, "நல்லவை யெல்லா அந் தீயவாம் தீயவு நல்லவாஞ் செல்வம் செயற்கு" என்ற குறளும் ஏனையவைகளோடு ஏற்ற சான்றாகின்றது. இல்லையெனில், நல்லவை தீயனவாகுமென்றும்தீயவைநல்லனவாகுமென்றும் பழிபடு கொள்கையை வள்ளுவர் அறத்துப்பாலின் கண் நெஞ்சால் நினைத்துரைக்கத் துணியமாட்டார். இனிவரும் பொருட்பாலிற்கே உரியது இம்மாற்றம். செல்வஞ் செய்யப்புகுவார்க்குத் திருவள்ளுவர் இன்றியமையாதவோர் உண்மையை எடுத்துரைத்துப் பின்னர் அவர்களைப் பொருட்பாலில் உய்க்கவேண்டியிருக்கின்றது. முயல்வதெல்லாம் முயன்றாலும், "வகுத்தான் வகுத்தவகையல்லாற் கோடி தொகுத்தார்க்குந் துய்த்தலரிது" என்பதை மறத்தலாகாது. தொகுத்தலுக்கும் துய்த்தலுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. முயற்சியினதாகலாம் ஊழும், அம்முயற்சியைக் கைகூட்டுவிக்கலாம், மற்றதனைத் துய்த்தற்கமைந்த தன்மையோ முற்றிலும் வேறொன்றும் என்பதைப் பொருட்பால் புகல்வதன்முன், வற்புறுத்திக்காட்டல் எண்ணியுதொன்றும் விளைவதொன்[illegible]முடிகின்ற விபரீதத்தைக் கடப்பது அரிதாகிவிடும். இதுவுமன்றி, "நன்றாங்கா னல்லவாக் காண்பவரன்றாங்கா லல்லற் படுவதெவன்" என்று ஓர் உறுதி கூறித் தேறுதலுமுரைக்கின்றார் வள்ளுவர்.

இனி, இக்குறளினின்று நாம் உணர்ந்துகொள்ள வேண்டியது ஒன்றுளது. "அன்றாங்கால் அல்லற்படுவதெவன்" என்றமையால் "நீ அல்லற்படவேண்டா" என்று அறிவுறுத்துகின்றார். அல்லல்பட வேண்டுமென்பதும் ஊழின் வழியே வருவதாயின் திருவள்ளுவர் நமக்கிம்மதிபுகட்டுவதால் ஏதுபயன்? ஆதலின் அன்றாவதும் அன்றாயதற்கு அல்லல் படுவதும் வேறுவேறு என்ற பெற்றி வெளிப்படுகின்றதன்றோ! வேறாய இவைகளின் திறன்தா னென்னை? ஒன்று நன்றாவதும் அன்றாவதும் ஊழின் வலியால் நிகழ்வன; நன்றாகுங்கால் இன்புறுதலும் அன்றாகுங்கால் துன்புறுதலும் நம் வயத்தன. ஆதலின் ஊழினால் நன்றல்லதொன்று ஆயினும் அதற்கு நாம் அல்லல்பட்டே தீரவேண்டும் என்னும் நியதியில்லை. நம் வித்தகத்தால் அவ்வல்லலை அனுபவியாமல் காத்துக்கொள்ள இயலும். சென்ற வாரஞ் சிந்தித்து நாமிங் குரைத்தவண்ணம், தெள்ளியராதல் விதியின் ஆட்சியினின்று முற்றிலும் வேறாயதாதலின், வித்தகமென்பது என்ஞான்றுமவரவர்வயத்ததே. எனின் ஒருவன் இன்பத்திற்குரியவனாவதும் துன்பத்திற்காளாவதும் விதிவசத்தால் விளைவன வல்ல; அவன் அடைந்துள வித்தகநிலையையே பொருந்தியது. வினையும் நிலையும் எதுவாயினும் அதனின்று

இன்பம் விழைவது ஒருவருக்கும் கடனன்று என்பதை முன்னியே பின்னர், "இன்பம் விழையான் வினைவிழைவான் தன் கேளிர் துன்பந்துடைத் தூன்றுந் தூண்" எனச் சாற்றுகின்றனர். இன்பம் விழையாதவன் தாண்" துன்பமுறுன் என்பதை இங்கெடுத்துச் சொல்லாமல் தன் கேளிர் துன்பத்தைத் துடைக்குந் தன்மையையே பேசினார். இக்குறள் ஆள்வினையுடைமை யென்னும் அதிகாரத்தில் இருக்கிறன்து. அவ்வதிகாரத்தில் 'முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' என்றும் "தெய்வத்தானாகா தெனினும், முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" என்றும், "ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித் தாழா துஞற்றுபவர்" என்றும் வந்திருக்குங் குறள்கள், ஊழென்னு மதிகாரத்திற்கு ஒருவாறு முரண்பட நிற்பனபோல் தோன்றலாம். எனினும், இவ்வாள்வினையுடைமை வேண்டப்படுவதெல்லாம் வேளாண்மை செய்தற்பொருட்டே என்பது இவ்வதிகாரத்தில் வற்புறுத்தப் பெறுகின்றது. வேளாண்மை என்பதற்கு "உபகாரியாகுந் தன்மை" என்று பரிமேலழகர் கூறும் உரை தகுதியுடன் பெருமையுஞ் சான்றது. "தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே வேளாண்மை யென்னுஞ் செருக்கு" என்றும், "தாளாண்மையில்லாதான் வேளாண்மை பேடிகை வாளாண்மைபோலக் கெடும்" என்றும் வருங்குறள்கள், தான் துய்த்தற்குச் செல்வம் செய்வதற்குரிய சூழ்ச்சிகளைச் சொல்வதிலும் வழங்குதற்குச் செல்வம் செய்யுமாறு தூண்டும் நினைவையே மேற்கொண்டுள என்பது வெளிப்படை. இவ்வகையிற்றான் ஊழையும் உப்பக்கங் காண்பது இயல்வதாகின்றது. வேளாண்மையின் அத்திவாரம் அன்பு. அன்பினது ஆற்றலின்முன் ஊழும் நில்லாதென்பதை நினைவுறுத்துகின்றது அக்குறள். இச்செவ்வியில் மாரிஸ் மேடர்லிங்க் உரைத்துள வாய்மைகளிற் பலவற்றை நாம் உட்கொள்ளவேண்டும். அவைகளை முன்னரே நாம் காட்டியிருக்கின்றோமாதலின், மீண்டும் ஈண்டு எடுத்தெழுவது மிகை. அனைத்தையும், தாம்பட்ட துன்பமும்உள்பட, இன்பமயமாக்கிக்கொள்பவர் ஊழையும் உப்பக்கங்கண்டவ ராகின்றார். இதனால் அவர்தாம் இன்பம் விழைந்தார் என்பது பொருளன்று; தமதன்பைச் செலுத்தினர், அவ்வளவே—அதுவே இன்பமாயிற்று. ஆதலின், தன்னூழென்றேனும் பிறனூழென்றேனுந் தளர்ந்திருத்தல் தக்கோர்க்குரியதன்று. "பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந் தாள்வினை யின்மை பழி" என்னுமத்திப்பியக்குறளை அன்பின் திறத்தில் மறத்தலாகாது. அன்பென்னுமித் தெய்வதத்துவம், கொடுப்போர் ஏற்போரென்னுமவ் விருதிறத்திலும் உயர்வுசெய்யும் ஊக்கத்தது. வித்தகத்தால் விளைவது அன்பு; மற்று அன்பு செயப்பட்டார்மாட்டு வித்தகம் விளைவிப்பதும் அது. வாழ்நாள் விழுமிதாகச் செய்யவல்ல வேளாண்மை இதுவாயின் அதன்முன் ஊழ் என்னசெய்யும். வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் பெருவழக்கிற்கு இழுக்கு முண்டோ........கருணைக்கிணங்காத வன்மையையும் நான்முகன் கற்பிக்க ஒரு கடவுளோ" என்று தாயுமானவர் பரிந்துரைத்தபோது ஊழ்முதல் யாவற்றையும் அன்புதான் வென்றுநிற்கும் ஆற்றலை விளம்பினர். இவ்வன்பிற்கும் வித்தகத்திற்கும் உள்ள தொடர்பு இதன்முன் இத்தலைப்பங்கங்களில் காட்டப்பெறுகின்றது. வித்தகத்தின் ஆட்சி அன்பேபாதலால் அது விதியினின்று வேறாகி விவகரிக்கவல்லது என்று சாற்றினர் மாரிஸ் மேடர்லிங்க். உபகாரியாவது உன் ஊக்கமாயின் ஊழையும் உப்பக்கம் காணலாம் என்பர் திருவள்ளுவர். உபகாரியாவதற்கியன்ற அன்பிற்கு உறைவிடம் வித்தகம். வித்தகராவது விதியின் வயத்திலின்றித் தம் முயற்சியிலேயே அடங்குமென்பதைமுன், "திருவேறு தெள்ளியராதலும்வேறு" என்ற சொற்களால் எடுத்துச் செப்பினர். ஆதலின்வித்தகமுடையனாகி, தன்னின்பம் விழையானாய் வேளாண்மைசெய்யுந் தாளாண்மையிற்றானே தங்கிய வாழ்க்கையன் ஒருவன் எத்திறத்திலுந் துன்பந்துடைப்பவனாதலால் ஊழென்பது அவன்முன் உப்பக்கங்காட்டியோடுகின்றது. இதுவே பொருளாயின், வள்ளுவர் நூலினுள் முரணென்று மில்லாமை வெளிப்படை வித்தகமோ விதிவசமோ என்னும் வினாவிற்கு விடையும் பகர்ந்ததாயிற்று.

வித்தகத்தின்பால் மாந்தரைக்கொண்டுய்ப்பது காவியமனைய கலைகளேயன்றி வேறொன்றில்லை. இது எவ்வாறென்பதை, "காலநிலையம் செய்யுங்கருமமும் செயல் வகையும்" என்னுந் தலைப்பின் கீழ் 1928வது ஆண்டில் வரைந்துள தலையங்கங்களில் விளக்கியிருக்கின்றோம்; மற்றும் பல் வேறுகட்டுரைகளில் வற்புறுத்தப்பெற்றிருக்கின்ற விடயமும் இதுவே.

---

அடுத்த வாரம் நம் காரியாலயத்திற்கு ஓய்வு நாள். ஆதலால் இதற்கு அடுத்த 26-வது நம்பர் இதழ் ஜூலை மாதம் 7-ந் தேதி வெளிவரும். ஜூன் மாதக் கடைசி வாரமும் டிஸம்பர் மாதக் கடைசி வாரமும் நம் காரியாலயத்திற்கு விடுமுறை நாட்களாவதும், வருடந்தோறும் ஐம்பது இதழ்களே வெளிவருவதும் நம் நண்பர்கள் நினைவிலிருக்கலாம்.

ஜூன் மாதத்துடன் சந்தா முடிவடைகின்ற நண்பர்கள், தம் மேற் சந்தாவை உடனே அனுப்பிவைக்கவில்லையாயின், ஜூலை மாதம் முதலில் அவர்களுக்கு வி. பி. அனுப்பப்படும்.

கலாநிலயச் சொல்லூடாட்டம் 3—விடை யனுப்பக் கடைசிநாள் ஜூலை மாதம் 4-ந்தேதி.

மானேஜர்

199139



# குன்றுடையானும் மக்களும்

## இரண்டாம் புத்தகம் — 3. கிளிப்போர்

[470-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டுநாழிகைக்குள் வேட்டுவப்படை தலையூர் மந்தையில் வில்லும் அம்பும் ஈட்டியும் வாளும் ஒல்லென்றொலிக்கத் திரண்டு நின்றது. பூசைக்கு வேண்டிய பண்டங்களை வண்டிகளில் ஏற்றுவித்துக்கொண்டு போர்க்கோலம் புனைந்து காளிமன்னனும் வந்துசேர்ந்தான். 'வேடுவர்க்கு வெற்றி! வேடுவர்க்கு வெற்றி!' என்று சேனை யார்ப்பரிக்க, தலையூர்க்காளி, பட்டத்துக் குதிரையேறி முன்னணியில் நின்று படையை நடத்தினன்.

வேடுவர்கள் கட்டளையும் மாயனூருங்கடந்து,மணவாசி தாண்டி மதுக்கரைக் காளியம்மன் கோவிலையடைந்து, குறிகாரன் சொன்னவண்ணம் காளியம்மனுக்கு அபிடேகம் முடித்து, முட்டைக்கண்ணும் முழப்பல்லும் விளங்கநின்ற களிதின்னும் மல்லன் பக்கலில் வந்து, ஐம்பது வேட்டிகளை விரித்து, கொண்டுவந்த சோறுகறிகளைக் கொட்டி முன்னே வைத்து, தூபதீபமிட்டுப் பூசைசெய்து கும்பிட்டெழுந்து கைகட்டி நின்றனர்.

அப்பொழுது மல்லன் எழுந்து குதித்துவருதலும் வேடுவர் கைகால் நடுங்க, நாக்குளற ஒடுங்கி நிற்பதைக் கண்டு, "நாட்டார்களே, அஞ்சவேண்டாம்," என்று கையமர்த்தி, 'என்னவரங் கேட்க வந்தீர்கள்? ஒளியாமல் உள்ளபடி சொல்லுங்கள்' என்றான்.

வேடுவர்கள், 'ஆண்டவனே, திருக்காம்புலியூரைக் கொள்ளையிடக் கருதிவந்தோம். வெற்றிபெற்று, வருமாறு வரங்கொடுத்தருள வேண்டும்' என்று சொல்லிப் பணிந்தனர்.

மல்லன் சோறுகறிகளின் மீது கண்களையோட்டி, 'சாப்பிட்டுச் சொல்கிறேன், சற்றே பொறுங்கள்' என்று சொல்லி, மண்டியிட்டு வாய்திறந்து, களியுருண்டைகளையும் நெல்லரிசிச் சோற்றையும் சுட்டுவைத்த கோழிகளையும் கடாக்கறியையும் ஒருநொடியில் தன் வயிற்றினுள்ளே உருட்டிவிட்டு, மதுக்குடங்களை மூச்சுவிடாமல் குடித்துத் தீர்த்து, 'எங்கே, நாட்டார்களே என்வயிறு நிரம்பவில்லையே! கால்வயிற்றுக்குக் கூடக் காணவில்லையே!' என்று முணுமுணுத்து, நீர் வேட்கையுற்றமையால் அயலிலோடும் காவிரியாற்றையடைந்து, வேண்டியமட்டும் தண்ணீரை உறிஞ்சிவிட்டு, மீண்டும் வேடுவர்பக்கலுக்கு வந்து, 'இதுதானோ பூசை, இன்னுமுண்டோ, நாட்டாரே?' என்றான்.

வேடுவர் நடுநடுங்கி,'ஆண்டவனே, கொள்ளை பலித்தால் வேண்டியபூசை கொடுக்கின்றோம்' என்றனர்.

களிதின்னுமல்லன், 'நீங்கள் இப்பொழுது திருக்காம்புலியூருக்குப் போதல்கூடாது. போனால் பிழையீர்கள். சங்கர் அறிந்தால் உங்களைச் சங்கரிப்பான்; தவறாது' என்றான்.

அதுகேட்டு வேடுவர்வாய்புதைத்து,"ஆண்டவனே, எங்களைக் கைவிடக்கூடாது. கொள்ளை பலிக்கும்படி உத்தரவாகவேண்டும்" என்று சொல்லிக் கீழேவிழுந்து கும்பிட்டார்கள்.

மல்லன், 'நான் சொன்னதை நீங்கள் கேட்கவில்லை. ஆயினும் அன்னையைக் கேட்டுவருகிறேன்; பொறுங்கள்' என்று சொல்லி மேலைவாயில் வழியாய்க் காளியம்மன்பால் சென்றான்.

வேடுவர் எழுந்து நின்று,'அன்னை உத்தரவு கொடாவிடில் மல்லன் நம்மைக் கொள்ளைக்குப் போகக்கூடாதென்று தடுப்பான். அவன் திரும்பிவருமுன்பே நாம் போய்விடுவோம்' என்று பேசி, கோவிலினின்றும் நீங்கி, மறைவாகநடந்து இடைச்சாமத்தில் திருக்காம்புலியூரை அடைந்தனர்.

அவ்வூரின் ஒருபுறத்திலே குடியானவர்கள் வசிக்கும் வீடுகளையும் பள்ளுப்பறை வசிக்கும் சேரிகளையும் அணுகி வேடுவர் பந்தங்கொளுத்தி, சனங்களை யடித்தும் வீடுகளையிடித்தும் குடிசைகளுக்கு நெருப்பு வைத்தும் கொள்ளையிட்டுக் கிடைத்த பொருள்களை மூட்டைகட்டிக்கொண்டு திரும்புகையில் பக்கத்தே ஒரு மாளிகையைக் கண்டனர். அம்மாளிகை, அவ்வூரிற் பெரியசெல்வனும், அண்ணன்மார்க்கு நண்பனும், சோழமன்னருக்கு ஆலோசனை சொல்பவனுமான பச்சையண்ண முதலிக்கு உரியது. வேடுவர் அம்மாளிகையணுகுதலும் அங்கிருந்த காவலாளர் ஓட்டம்பிடித்தனர். அன்றிரவு முதலியாரும் ஊரிலில்லை. வேடுவர் அம்மாளிகையை எளிதிற் கைப்பற்றிக் கொள்ளையடித்துப் போகையில், பச்சையண்ணமுதலி மகள் குப்பாய் என்பாள் சிலநாட்களுக்குமுன் பருவமெய்திப் பூத்து அம்மாளிகைக்கு வெளியே ஒரு குடிசையில் துயில்வதைக்கண்டு, நித்திரைகலையாமல் அப்பெண்ணை யொரு மூடுபல்லக்கிற்குள்வைத்து எடுத்துக்கொண்டு, திருக்காம்புலியூரைக் கடந்து, வந்தவழியே போனால் களிதின்னு மல்லனுக்குக் கோபமுண்டாகு மென்று அஞ்சி, வீரியபாளையத்தின்மேற் படைசெல்லக் கொம்பூதி, வெள்ளை வீசி, விடியுமுன் தமதுநாட்டு எல்லையை யடையவிரும்பிக் கடுகிநடந்து, வெள்ளியுதிக்க வீரமலைக் காட்டையடைந்து, தமது எல்லை சேர்ந்து, சுமையிறக்கி, மூடுபல்லக்கை முன்னேவைத்து, 'இனி வேளாளர்கள் செய்வது செய்க' என்று வீரம்பேசி,கவலையற்று, தட்டுக்கரங் கட்டியும் சடுகுடுப்பாடியும் பொழுதுபோக்கத் தொடங்கினர்.

மூடுபல்லக்கில் துயின்றுகொண்டிருந்த குப்பாய்நித்திரை தெளிந்து, கண்விழித்து, தன் இனத்தாரைப்பக்கத்திற் காணமல் ஐயுற்று மருண்டு விரைந்தெழுந்து உட்கார்ந்து, பல்லக்கை மெல்லத் திறந்துபார்த்தாள். வேடுவர் கூட்டத்தையும் ஆயுதங்களையுங்கண்டு பதறி, தன் நிலைமையை ஒருவாறு ஊகித்துணர்ந்து, ஏங்கி முகம் வாடி, 'ஐயோ, சிவனே, பாவி நான் என்ன செய்வேன்! என் இனத்தார்கள் அறியாமல் வேடுவர் என்னைச் சிறைசெய்து வந்தனரே, என்ன தீங்கு செய்வாரோ? நான் எப்படித் தப்பிப் பிழைப்பேன்?' என்று சொல்லி முகத்திலும் மார்பிலும் அறைந்துகொண்டு உகுத்த கண்ணீர் உடுத்த சேலையை நனைக்க அழுது, "தங்காள், அபயம்! தங்காள், அபயம்!' என்று கூக்குரலிட்டுப் புலம்பினள்.

அன்றிரவு அண்ணன்மார் கொண்டுவந்து கொடுத்த பொற்கிளியைத் தன் பக்கத்தில் வைத்து அன்னவடி

வப் பொன்னூஞ்சலிலே கண்துயின்ற தங்காள், குப்பாய் வனத்திலிருந்து அழுவதைக் கனவிற் கண்டெழுந்து, அண்ணன்மாரை விரைவாக அழைத்துவருமாறு இரு தாதியரை அனுப்பினாள்.

அண்ணன்மார் தங்காள் அரண்மனைக்குச் சென்று அவளால் குப்பாயின் செய்தியறிந்து, தமது அரண்மனைக்குத் திரும்பிவந்து, 'போருக்கெழுக, படைதிரட்டுக' என்று தம்மாட்களுக்கு உத்தரவிட்டனர்.

இதற்குள் திருக்காம்புலியூர்க் குடிகளும் பச்சையண்ண முதலியின் ஆட்களும் சிற்றூலைப் பட்டணத்துக்கு ஓடிவந்து, அண்ணன்மார் முன்னிலையில் அலறியழுது, 'மன்னர்களே, ஊர் கொள்ளைபோயிற்றே! நாங்கள் இனி என்ன செய்வோம்? எப்படிப் பிழைப்போம்? வேடுவர்கள் வந்து வீட்டையிடித்தார்களே! தீவைத்தார்களே! எங்கள் மனைவிமக்களை யடித்தார்களே! குப்பாயைச் சிறையெடுத்துச் சென்றுவிட்டார்களே! என்றுசொல்லி முறையிட்டார்கள். சின்னண்ணன் அவர்கள் சொன்னதைக் கேட்டு, 'அஞ்சாதீர்கள், தீங்கு செய்த வேடுவரை வெட்டிக் கருவறுத்து, உங்கள் உடைமையை மீட்டுத்தருகிறேன். இதோ, ஒரு நொடியிற் புறப்படுகிறேன்' என்றான்.

பின்பு சின்னண்ணன் போர்க்கோலம் புனைந்து, தங்காளுக்கும்கோட்டைக்கும் பொன்னரைக் காவல்வைத்து, அத்தைபிள்ளை மைத்துனனையும் சாம்பானையும் அழைத்துக்கொண்டு சிறுபடை யொன்று புடைசூழப் புறப்பட்டான்.

# தமிழ்ப் பாடம் 25.

## நள வெண்பா—சுயம்வர காண்டம்

[465-வது பக்கத் தொடர்ச்சி]

இனிவரும் ஒன்பது செய்யுள்கள் தமயந்தியின் திருமணத்தை அழகுடன் உரைப்பதோடு இச்சுயம்வரகாண்டம் முடிகின்றது.

வெங்கதிரோன் றானும் விதர்ப்பன் றிருமடந்தை
மங்கலநாள் காண வருவான்போற்—செங்குமுதம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கு நன்னெஞ்சிற்
றீயடங்க வேறினன் றேர். 152.

பதப்பிரிவு:—வெம் கதிரோன் தானும் விதர்ப்பன் திரு மடந்தை மங்கலம் நாள் காண வருவான் போல் செம்குமுதம் வாய் அடங்க மன்னன்கும் வஞ்சிக்கும் நல் நெஞ்சில் தீ அடங்க ஏறினன் தேர்.

கருத்து:—விவாகதினத்தில், மணவினை காண்பதற்கு வருபவனைப்போல் சூரியன் உதயமாயினன்.

பதவுரை.

வெம் - வெப்பமாகிய
கதிரோன் - கிரணங்களையுடைய சூரியன்,
தானும் - தானும்
விதர்ப்பன் - விதர்ப்பராஜனுடைய
திரு - அழகிய
மடந்தை - பெண்ணினது
மங்கலம் - மங்களகரமாகிய
நாள் - தினத்தை
காண - காண்பதற்கு
வருவான்போல் - வருகின்றவனைப்போல்,
செம் - சிவந்த
குமுதம் - அல்லிமலர்கள்
வாய் - தம் வாய்
அடங்க - மூடிக்கொள்ளவும்,
மன்னன்கும் - நளனுக்கும் [தமயந்திக்கும்
வஞ்சிக்கும் - வஞ்சிக்கொடி போன்ற
நல் - அவர்களது, நல்ல
நெஞ்சில் - மனதில்
தீ - காமத்தீயானது
அடங்க - அவியவும்
தேர் - தன் ஒற்றைச்சக்கரத் தேரில்
ஏறினன் - ஏறினன்.

விளக்கம்:—கதிரோன்— வருவான்போல்— அடங்க—அடங்க—தேர்—ஏறினன், என்று சேர்த்து நோக்கவேண்டும்.

விரிவுரை:—தமயந்திக்கு அது மணநாளாக இருந்தாலும் இல்லாமற்போனாலும் சூரியன் என்றையும்போல் அன்றைக்கும் உதயஞ்செய்திருப்பான். ஆயினும், இயற்கையாய் நிகழ்கின்ற அந்த நிகழ்ச்சிக்குக் கவி இங்குத் தன் குறிப்பிற்கு ஏற்றவாறு ஒரு காரணத்தைக் கற்பித்தார். ஆகையால்இது தற்குறிப்பு ஏற்ற அணி. அதன் இலக்கணத்தைப் பொதுவகையில் 143 வது பக்கத்தில் சொல்லி இருக்கின்றேன். இவ்வாறு, குறித்த விஷயத்தைச் சொல்கின்ற வகையில் தற்குறிப்பேற்ற அணி மூன்று விதப்படும். இந்த ஒவ்வொரு வகைக்கும் இவ்விரண்டு உள்பிரிவுகள் இருக்கின்றன. ஆக, இவ்வணியில் ஆறுவகைகள் இருக்கின்றன. இருப்பினும் முதல் வகையாகிய பிரிவுகள் மூன்றும் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதைமாத்திரம் இங்குப் பார்ப்போம்:—

(1) பொருள் தற்குறிப்பு ஏற்ற அணி:—இது பொருள் சம்பந்தமாக வருவது. "அந்தணர் செய்கின்ற ஓமப்புகையே மேகமாய்த் திரள்வதுபோல் அப் புண்ணிய பூமியில் மழைவளம் சிறந்திருந்தது." என்ற உதாரணத்தில், மேகம் ஒருபொருள், புகை ஒருபொருள். ஒருநாட்டில் அந்தணர்கள் நெறியும் மழையினது வளமும் பிழைத்ததில்லை என்று சொல்வதற்குப் புகை என்னும் பொருளிற்கு மேகம் என்னும் மற்றொரு பொருளின் குறிப்பை ஏற்றினர். ஆதலால் இது பொருள் தற்குறிப்பு ஏற்ற அணி.

(2) ஏதுத் தற்குறிப்பு ஏற்ற அணி:—ஹேது, என்பது ஏது எனத் தமிழில் எழுதப்படும். ஏது என்றால் காரணம் அல்லது நிமித்தம் என்பது அர்த்தம். ஆதலின் இந்தவகை, காரண சம்பந்தமாக வருவது. "மாதரார் கருங்கண் பார்வைபட்டுப்பட்டு இராமனது மேனி கரியதாயிற்றென்று சொல்லலாம்" என்ற உதாரணத்தைப் பார்ப்போம். இயற்கையாய இராமனது கரியநிறத்திற்கு வேறு ஒரு குறிப்புச் செய்து அமைப்பதால் இது தற்குறிப்பேற்றவணி. எனினும்,முன் உதா



ரணத்தில் புகை மேகம் என்ற இரண்டு பொருள்களுக்குள்ள பேதத்தைச் சந்தேகமாய்த் தேர்ந்ததுபோல், இங்கு எந்த இரண்டு பொருள்களுக்கும் உள்ள பேதத்தைப்பற்றிப் பிரித்தேனும் சேர்த்தேனும் பேசவில்லை. மாதர்களுடைய பார்வைதான் இராமனது மேனியோ என்று எவரும் சந்தேகப்படவில்லை என்பதைக் கவனித்துக்கொள்ளவேண்டும். இயற்கையாகவே கருநிறமுடைய இராமன் தெருவிலே போனபோது மாதர்களெல்லாம் இமைகொட்டாமல் பார்த்தனர் என்றவொரு குறிப்பை வைத்துக்கொண்டு, அப்பார்வை பட்ட காரணத்தினால்தான் கருமையாயினனோ என்று காரணத்தைச் சந்தேகமாக ஏற்றிப்பேசுகின்ற இது ஏதுத் தற்குறிப்பேற்ற அணி.

(3) பயன் தற்குறிப்பேற்ற அணி:—இது இயற்கையாய் நினையாத ஒரு பயனைக் குறிகொண்டு கற்பிப்பது. "நின்முகத்தின் பொலிவைப் பெறவேண்டுமென்றே தாமரைநீரில்நின்று தவம்செய்கின்றதுபோலும்." இந்த உதாரணத்தில் தாமரை தவம்செய்வதாகப் பாவித்து அந்தத் தவத்தால் பெறவேண்டிய ஒருபயனைச் சந்தேகமாய்ஏற்றுக்கொள்கின்றபடியினால் அதுபயன் தற்குறிப்பேற்ற அணி ஆகின்றது.

இந்த வித்தியாசங்களெல்லாம் பார்த்தமாத்திரத்தில் கொள்ளத்தக்கனவாய்ச் சுலபமாக இரா. மிகவும் நுணுக்கமானவை. கவனித்து ஆராய்ந்து தெரிந்துகொள்ளப் பழகவேண்டும். அப்பழக்கத்தினாலின்பம் விளைவதன்றிப் பகுத்தறியும் நுணுக்கமும் மனதிற்கு ஏற்படும்.

இப்பொழுது, இந்தச்செய்யுள் என்ன அணி என்பது விளங்கும். சூரியன் மங்கலநாள் காண வருவான் போல் வந்தான், என்பது விஷயம். இதனில் இயற்கையாக என்றையும்போல் அன்றைக்கும் சூரியன் உதயமாகின்ற செய்தி சந்தர்ப்பத்திற்கு இணங்கக் கவியின் குறிப்பை ஏற்றுக்கொண்டது. ஆதலால் தற்குறிப்பேற்ற வணி. சூரியன்தான் மங்கல நாளோ என்ற அவ்விரு பொருள்களுக்கும் ஒரு சந்தேகசம்பந்தமும் குறிக்கவில்லையாகையால், இது பொருள்தற்குறிப்பு ஏற்ற அணி அன்று. மற்று மங்கலநாள் காரணமாகச் சூரியன் உதித்தானோ அல்லது சூரியன் உதித்த காரணத்தால் மங்கலநாளாயிற்றோ, என்றகாரண சந்தேகமும் ஒன்றுமில்லை; ஆகையால் ஏதுத் தற்குறிப்பேற்ற அணியுமன்று. சூரியன் மங்கலநாள் காண்கின்ற பயனை அடைய அன்றையதினம் வந்திருப்பானோ என்ற குறிப்புத் தோன்றுகின்றபடியால், இது பயன் தற்குறிப்பேற்ற அணியாகும்.

கொங்கையின் பாரத்தை இடுப்புச் சுமக்க முடியாது என்று நூபுரங்கள் புலம்பின (22-வது செய்யுள், 143வது பக்கம்) என வருவதும் இத் தற்குறிப்பேற்றஅணியே. ஏனெனில், நடக்கும்பொழுது காலில் சலங்கை ஒலிப்பது இயற்கை. ஆடவன் அணிந்திருந்தாலும் குழந்தைகள் அணிந்திருந்தாலும் அச்சலங்கை ஒலிக்கத்தான் ஒலிக்கும். இருப்பினும் அந்தச் சலங்கையின் ஒலி இங்கு ஒரு குறிப்பு ஏற்றுக்கொண்டது. முலையேனும் இடுப்பேனும் சதங்கையோடு நேராகப் பொருள்களாயிருக்கின்ற ஓர் தன்மையில் சந்தேக சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. ஆகையால் இது பொருள் தற்குறிப்பேற்றவணி அன்று. இடை ஒடியுமே என்ற இரக்கம் காரணமாகப் புலம்பின என்பது கருத்தாதலால் இது ஏதுத் தற்குறிப்பேற்ற அணி. அல்லது அவள் நடக்குந்தோறும் இவ்வாறு புலம்பி அவளை நடக்காதபடி செய்கின்ற பயனை அந்த நூபுரங்கள் கருதினபோல் குறிக்கப்படுவதால் இதனைப் பயன் தற்குறிப்பேற்ற அணியென்றுஞ் சொல்லலாம்.

"சந்திரனது சுடர்பட்டு ஆகாயத்தில் உண்டான கொப்புளங்களைவிண்மீன் என்றுகூறலாமோ" (93வது செய்யுள், 362-வது பக்கம்) என்றதும், தற்குறிப்பேற்றவணி. நக்ஷத்திரமாகிய பொருளைக் கொப்புளம்என்ற பொருளாகக் குறித்ததால் அது பொருள் தற்குறிப்பேற்ற அணி என்பது எளிதில் விளங்கும்.

குறிப்பு:—இடைச் சொல்லின் இலக்கணமும் ஓ ஏ என்பனவற்றின் பொருள்களும் ஒருசிறிது கற்றிருக்கின்றீர். உம் என்பதும் தனியாக இருந்து எந்த அர்த்தமும் தராமல், பெயர்ச்சொல் வினைச்சொற்களோடு சேர்ந்துகொண்டே பொருள்தரும். ஆகையால் இதுவும் ஒரு இடைச்சொல். இதற்குப் பல பொருள்கள் இருக்கின்றன. அவைகளுள் சிலவற்றை மாத்திரம் இங்குப் பார்ப்போம்.

(1) இராமனும் கிருஷ்ணனும் கோவிந்தனும் வந்தனர், என்றவழக்கு யாவரும் அறிவர். இதில் வருகின்ற உம்என்பது யார்யார் வந்தனர் என்று எண்ணுவதற்கு உபயோகப்படுகின்றது. ஆகையால் இதை எண்ணும்மை என்பர்.

(2) உம், மிகுதி அல்லது சிறப்புப் பொருளைத் தரும். நல்லதாயினும் கெட்டதாயினும் மிகுந்திருத்தலைக்காட்டுவதற்கு உம் வரும்போது அதனைச் சிறப்பும்மை என்பர். இந்தச் சிறப்பும்மை இரண்டு விதப்படும்:—

(a) ஒரு பொருளின் அல்லது செயலின் மேன்மையை அல்லது மிகுதியைச் சிறப்பித்துக் காட்ட வருமாயின், அது உயர்வு சிறப்பு உம்மை ஆகும். "கலைமகளை ஆராதித்தால் கல்லும் சொல்லாதோ கவி," என்ற வாசகத்தில் உம், கல் என்னும் பெயர்ச்சொல்லோடு சேர்த்துவந்து என்ன காரியம் செய்கின்றது பாருங்கள். மனிதர் கவிசொல்வது ஆச்சரியமன்று, கல்கூட அவளை ஆராதித்தால் கவிசொல்லும் என்பதால் கலைமகளாராதனையின் உயர்வைக் காட்டுகின்றது. ஆதலால் அது உயர்வு சிறப்பு உம்மை. கழுதும் வழிதேடும் கங்குல், என்று முன்னமே 113-வது செய்யுளில் வந்திருக்கின்றது. எப்படிப்பட்ட இருட்டிலும் எளிதாக சஞ்சரிக்கின்ற பேய்களும் வழிதேடியதென்றால் அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கவேண்டுமென்பதைக் கழுது என்பதோடு சேர்ந்த உம் சிறப்பித்தலால், அதுவும் உயர்வுசிறப்பும்மை.

(b) ஒரு பொருளின் அல்லது செயலின் தாழ்மையை அல்லது குறைவைச் சிறப்பித்துக்காட்ட வருமாயின் அந்த உம்மை, இழிவு சிறப்பும்மை ஆகும். "என் கையில் ஒரு தம்படியும் இல்லை," என்று சொல்லும்போது, தம்படியோ மிகக்குறைந்தது, அதுகூடத்தான் இல்லை. அதுவும் இல்லை என்றால் இன்மையாகிய குறைவின் சிறப்பைக் காட்டுவதால் தம்படியும் என்பதிலுள்ள உம் இழிவுசிறப் பும்மையாகின்றது. 'முகங்கடுத் திடுவார் சோற்றை நாயும் தின்னாது' என்பதும் இழிவுசிறப்பும்மையாவது விளங்கும்.

(3) உம், என்பது எச்சப் பொருளில் வரும். எச்சம் என்றால் குறைவு என்பது அர்த்தமென்று அறிவீர்.

ஒரு குறைவு நிறைவதைக் குறிக்கவரும்போது அதற்கு எச்ச உம்மை என்று பெயர். இந்த எச்ச உம்மை இரண்டு விதப்படும்:—

(a) 'இதோ கிருஷ்ணனும் வந்துவிட்டான்' என்னும்போது, மற்றவர்களெல்லாம் முன்னரே வந்து இருந்தனர், கிருஷ்ணன் வருவது குறைவாயிருந்தது, அவனும் வந்ததால் அக்குறைவு நிறைந்துவிட்டது, என்று தெரிவதால், இது இறந்தது தழுவிய எச்ச உம்மை. கிருஷ்ணன் வந்தான் என்று இறந்த காலத்திலேயே எச்சம் பூர்த்தியானதைப்பற்றி இதனை இறந்தது தழுவியது என்றழைப்பர்.

(b) 'சற்றுப் பொறுங்கள், கிருஷ்ணனும் வருவான்,' என்றால் கிருஷ்ணன் வந்திராத குறை எதிர்காலத்திலே நிறையுமாதலால் இது எதிரது தழுவிய எச்ச உம்மை.

இந்தச் செய்யுளில், வெங்கதிரோன் தானும் வந்தான், என வருகின்ற இடத்தில் உம் என்ன பொருளைத் தருகின்றது? மற்றவர்கள் வந்திருந்தனர், சூரியனும் வந்தான், என்று கொண்டால் இறந்தது தழுவிய எச்ச உம்மையாம். அல்லது சூரியன்கூட அந்த மங்கலநாளைக் காணவந்தான் என்று கொண்டால், உயர்வு சிறப்பும்மை.

மன்னற்கும் வஞ்சிக்கும், என்றதில் உள்ள உம்மைகள் எண்ணும்மை என்பது எளிதில் விளங்கும்.

குதிரை ஓடும், கிளிபேசும், படிக்கும் பிள்ளை, பெய்யும் மழை, என்பனபோன்ற இடங்களில் வினைமுற்றாகவும்பெயரெச்சமாகவும் வருகின்ற உம்மைகளுக்கு இந்தப் பொருள்களெல்லாம் தேடி மயங்காதீர்கள். இவை விகுதிகளாய் நின்று வினைச்சொல்லை நடத்துவன.

இனித் தமயந்தி மணக்கோலம் கொள்வதும், நளனுக்கும் அவளுக்கும் மணவினை நிகழ்வதும், இருவரும் மணவாழ்க்கை எய்தி மகிழ்வதும் கூறப்பட்டிருக்கின்றன. அச்செய்யுள்கள் மிக்க அழகுடையனவாயினும் நம் பாடத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லையாகையால் உரையின்றிச் செய்யுள்ளைமாத்திரம் தருகின்றேன்.

---

இன்னுயிர்க்கு நேரே யிளமுறுவ லென்கின்ற
பொன்னழகைத் தாமே புதைப்பார்போன்—மென்
சூட்டினூர் சூட்டித் துடிசே ரிடையாளைப் [மலருஞ்
பூட்டினூர் மின்னிமைக்கும் பூண். 153.

கணிமொழிந்த நாளிற் கடிமணஞ் செய்தா
ரணிமொழிக்கு மண்ண லவற்கும்-பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் னறைபுக்கார்
மற்றெவரு மொவ்வார் மகிழ்ந்து. 154.

செந்திருவின் கொங்கையினுந் தேர்வேந்த னாகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து—வெந்தீயு
நஞ்சுந் தொடுத்தனைய நாம மலர்வாளி
யஞ்சுந் தொடுத்தா னவன். 155.

ஒருவ ருடலி லொருவ ரொதுங்கி
யிருவ ரெனுந்தோற்ற மின்றிப்—பொருவெங்
கனற்கேயும் வேலானுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று. 156.

குழைமேலுங் கோமா னுயிர்மேலுங் கூந்தன்
மழைமேலும் வாளோடி மீள—விழைமேலே
யல்லோடும் வேலா னகலத் தொடும்பொருதாள்
வல்லோடுங் கொங்கை மடுத்து. 157.

வீரனக லச்செறுவின் மீதோடிக் குங்குமத்தி
னீர விளவண்ட லிட்டதே—நேர்பொருத
காராரு மெல்லோதிக் கன்னியவள் காதலெனு
மோராறு பாய வுடைந்து. 158.

கொங்கை முகங்குழையக் கூந்தன் மழைகுலையச்
செங்கயற்க ணோடிச் செவிதடவ—வங்கை
வளைபூச லாட மடந்தையுடன் சேர்ந்தான்
விளைபூசற் கொல்யானை வேந்து. 159.

தைய றளிர்க்கரங்க டன்றடக்கை யாற்பற்றி
வைய முழுது மகிழ்தூங்கத்—துய்ய
மணந்தான் முடித்ததற்பின் வானுதலுந் தானும்
புணர்ந்தான் நெடுங்காலம் புக்கு. 160.

சுயம்வர காண்டம் முற்றிற்று.

---

# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[473-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 3. களம் 2.

ஜனங்கள்:—முற்றிலும் உண்மையே,—ஆம், மரணசாஸனம்—இருந்தந்த மரணசாஸனத்தைக் கேட்போம் (1)

ஆண்டனி:—ஸீஸரின் இலச்சினையுடன் இதோ இருக்கின்றதம் மரணசாஸனம். உரோம்நகரவாசி ஒவ்வொருவனுக்கும், தனித்தனி ஒவ்வொரு மனிதனுக்கும், எழுபத்தைந்து டிராக்மா கொடுத்திருக்கின்றான். (2)

இரண்டாம் நகரவாசி:—வரம்பிலா வள்ளல் நம்ஸீஸர்! அவனைக்கொன்றபழியைத் தீர்த்துவிடுவோம். (3)

மூன்றாம் நகரவாசி:—ஓ, அரச ஸீஸரே!

ஆண்டனி:—பொறுமையுடன் கேளுங்கள்.

ஜனங்கள்:—ஓகோ! சும்மாவிருங்கள்!

(1) ஆண்டனி நினைப்பூட்டவே, ஜனங்கள், ஸீஸரின் மரணசாஸனத்தைக் கேட்பதற்குத் தங்குகின்றனர்.

(2) இலச்சினை -முத்திரை. டிராக்மா என்பது இட்டாலி தேயத்து நாணயம். 75 டிராக்மா 45 ரூபாய்க்கு நிகராகும்.

(3) ஸீஸரின் மரணசாஸனத்தின்படி தங்களுக்கு அவன் அளித்திருக்கின்ற நன்கொடைகளைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்னமேயே சனங்கள் ஸீஸரின்பால் பரிவுகொண்டு சதியாளர்களுக்கு விரோதமாய்க் கிளம்பிவிட்டனர் என்று காட்டியிருப்பதால், ஸீஸரைக் கொன்றது அநீதி என்ற கோபத்துடன், அவன் தங்களிடம் அன்புவைத்தவன் என்ற நினைவுஞ்சேர்ந்து இவர்களைப் பின்னும் அதிகமாய்க் கனற்றிவிட்டது.

(4) பகைவர்என் றிருந்தோரை எல்லாம் பசையறவென்ற ஆற்றலும், உலகித்திற்கெல்லாம் ஒரு மனிதனாய் நின்று உயர்ந்த பெருமையும், தமர் பிறர் என்ற வேற்றுமையின்றித் தன்னுடைமைகளை நகரசனங்களனைவருக்கும் அளித்த



ஆண்டனி:—அதுவுமன்றி, டைபர் நதிக்கு இக்கரையிலுள்ள, தன் நடைபாதைகளையும், தன் நந்தனவனங்களையும், புதிதுநட்ட தன் கனிமரச் சோலைகளையும் உங்களுக் களித்திருக்கின்றனன்- உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் என்றென்றும் உரியதாக இவைகளைக் கொடுத்துளன். நீங்கள் உலவிச்சென்று களிப்புறுதற்கமைந்த உல்லாசப் பொதுவிடங்கள். இருந்தனன் இங்கோர் ஸீஸர், இன்னொருவன் இனிவருத லெந்நாளோ! (4)

முதல் நகரவாசி:—என்றுமில்லை, என்றுமில்லை-வாருங்கள்! புனிதபூமியில் இவன் உடலினைக் கொளுத்தி அக்கொள்ளிகளைக்கொண்டு, இவ்வஞ்சகக் கள்வர் வீடுகளை எரித்திடுவோம். உடலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். (5)

இரண்டாம் நகரவாசி:—போய், நெருப்புக் கொண்டு வாருங்கள்.

மூன்றாம் நகரவாசி:—உட்காரும் பலகைகளைப் பறித்துக் கொள்ளுங்கள்.

நான்காம் நகரவாசி:—பலகைகள், பலகணிகள்—எதுவானாலும் பறித்துத் தள்ளுங்கள்.

[ஜனங்கள், ஸீஸரின் உடலை எடுத்துக்கொண்டு போகின்றனர்]

ஆண்டனி:—நடக்கட்டும்! அழிவே, நீ கால்வைத்துப் புறப்பட்டுவிட்டாய்; எவ்வழி செல்கின்றாயோ, செல்க. (6)

[ஓர் வேலையாள் வருகின்றான்]

ஏடா, என்ன?

வேலையாள்:—ஐய, ஆக்டேவியஸ், உரோமிற்கு வந்து சேர்ந்துவிட்டனன்.

ஆண்டனி:—எங்குளன் அவன்?

வேலையாள்:—அவனும் லெபிடியஸ்ஸூம் (7) ஸீஸரின் மனையின்கண் இருக்கின்றனர்.

ஆண்டனி:—அங்கவனைச் சென்றுநான் காண நேரே ஏகுவேன். விரும்பியவளவிலேயே வருகின்றனன் அவன். அதிர்ஷ்டம் களித்திருக்கின்றது. இந்த நிலையில் நமக்கது எதனையுந் தரும். (8)

வேலையாள்:—ப்ருட்டஸூம் காஸ்ஸியஸூம் உரோம் நகர வாயிலூடு பித்தர்போல் துரத்தப்படுகின்றனரென்றவன் சொல்லக்கேட்டேன்.

ஆண்டனி:—ஜனங்களைப்பற்றி, அவர்களை நானெவ்வண்ணம் அசைத்திருக்கின்றேனென்பத வர்களுக்குத் தெரியவந்திருக்கலாம். ஆக்டேவியஸின்பால் என்னை அழைத்துப்போ.

[இருவரும் போகின்றனர்]

இரண்டாம் களம் முற்றிற்று.

---

### அங்கம் 3. களம் 3.

இடம்:—உரோமாபுரியில் ஒரு தெரு.

ஸின்னா என்னும் புலவன் வருகின்றான்.

ஸின்னா:—ஸீஸருடன் நான் விருந்துண்டதாக இன்றிரவு கனவுகண்டேன்; துரதிர்ஷ்ட விடயங்களே என் பிரேமைநினைவில் அடர்கின்றன. வாயிற்படி கடந்து வெளியில் திரிய எனக்கு விருப்பமில்லை. எனினும், ஏதோ என்னை இழுத்துச்செல்கின்றது.

[ஜனங்கள் வருகின்றனர்]

முதல் நகரவாசி:—உன் பெயரென்ன?

இரண்டாம் நகரவாசி:—எங்கு நீ ஏகுகின்றாய்?

அருளும், அரசமுடியினைத் தனக்கு மும்முறை அளிக்கக் கண்டும் அது வேண்டாவென மறுத்த அடக்கமும், இத்தனைக் குணாதிசயங்களும் ஒருங்கே அமைந்த இந்தஸீஸரைப் போல் இன்னொருவன் இவ்வுலகில் பிறக்க இயலுமோ!—என்பது பொருள்.

(5) ஸீஸரைக்கொளுத்தி அவன்சிதையிலிருந்து கொண்டுவந்த கொள்ளிக்கட்டைகளாலேயே ப்ருட்டஸ் முதலானவர்தம் வீடுகளை எரிக்கவேண்டுமென்று ஜனங்கள் நிச்சயம் செய்கின்றனர். தன்வினை தன்னைச்சுடும் என்ற பழமொழி கருத்தினல்மாத்திரமன்றி எழுத்தெழுத்தாய் இங்கு நடைபெறத் தலைப்படுகின்றது. ஸீஸரைக் கொன்று அவர் கொளுத்துதற்கு வளர்த்திய தீயே அவர்களைச் சுடவேண்டுமென்பது விதியானது தன் வினையை விளையாட்டாய்ப் புரிகின்ற வகையென் றுணரவேண்டும்.

(6) ஜனங்களை, அழிவுசெய்யத் தூண்டி விட்டேன், இனி நடப்பது நடக்கட்டும், என்பது பொருள்.

(7) லெபிடியஸ், என்பவன் உரோமாபுரிப் பெருமக்களில் ஒருவன். முன்,பாம்பே ஜூலியஸ்ஸீஸர் க்ரேஸஸ் என்னும் மூவரும் ஒன்றாகச் சேர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டதுபோல, இப்பொழுது ஆண்டனி, ஆக்டேவியஸ் ஸீஸர், லெபிடியஸ் என்னும் இம்மூவரும் ஒன்றுசேர்ந்து அரசியல் போராட்டங்களில் இனி விவகரிக்கப் போகின்றனர். பேர்கள் வேறானாலும் சரித்திரம் ஒன்றுதான். முன்னைய மூவரைப்போலவே இப் பின்னைய மூவரும் தம்முள் பகைகொண்டு ஒருவரை யொருவர் நாசஞ்செய்து முடிகின்றனர். இது எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் உரியதோர் உண்மை.

(8) நான் எண்ணியபடியே ஜனங்கள் என்வய மாயினர்; ஆக்டேவியஸூம் அதிவிரைவில் வந்துசேர்ந்தான். அதிர்ஷ்ட தேவதை இப்பொழுது என்னிடத்தில் அதிகம் சந்தோஷம் கொண்டிருக்கிறதென்பது தெரிகின்றது. ஆகையால் நான் நினைத்தகாரியம் நினைத்தபடியெல்லாம் கைகூடும் என்பதிற் சந்தேகமில்லை.

---

### அங்கம் 3. களம் 3.

இந்த ஸின்னாவேறு, முன்வந்த ஸின்னாவேறு. அவன் சதியாளர்களில் ஒருவன், இந்த ஸின்னா ஓர் புலவன்; இவனுக்கும் ஸீஸரின்கொலைக்கும் எவ்விதச்சம்பந்தமும் இல்லை. ஸீஸரின், மரணச்சடங்குகளைப் பார்க்கப்புறப்பட்டுப்போகின்றான். முன்களத்தில் கண்டபடி ஜனங்கள் ஸீஸரைக் கொளுத்திவிட்டு, கொள்ளிக்கட்டையுங் கையுமாய் மிக்க ஆரவாரஞ்செய்துகொண்டு வருகின்றனர். பேய்பிடித்தாடுபவர்போல் தம்வயந்துறந்து திரிந்த இச்சனங்களுக்கிடையே அகப்பட்ட ஸின்னா, பாவம், வதைசெய்யப்பெறுகின்றான். சதியாளர்களில் ஒருவனுடைய பெயர் இந்தப் புலவனுக்கும் இருந்ததுதான் இவன் செய்த குற்றம்.

(1) கேடு வருதன்முன், துர்க்கன முதலியன தோன்றலும், காரணந்தெரியாமலே ஓர் சஞ்சலம் மனதைப் பற்றிக்கொள்வதும் இயற்கை.

(2) பித்தரெனக் கொலைகொண்டு திரியும் சனங்கள், கேள்வியின்மேல் கேள்வியாக அடுக்குகின்றனர். ஜனங்களைக் கிளப்பிவிடுவது பூதத்தை எழுப்பிவிடுவதை ஒக்கும்.

(3) இவைகளையெல்லாம் விளையாட்டாகக் கொள்கின்றான் ஸின்னா. அவர் கேட்ட கேள்விகளைச் சிரித்துக்கொண்டே இணைத்துக் கூறுகின்றான்.

(4) என்னை விவேகமுடன் பதில்சொல்லச் சொன்னீர்கள். இதற்குப் பதிற்சொல்ல விவேகம் என்னவேண்டியிருக்கின்றது. விவாக விஷயத்தில்தான் ஒருவேளை விவேகம் வேண்டும்; அதுபற்றிக் கேட்பீர்களாயின், விவாகம் செய்துகொண்டிருப்பவர்கள் படுகின்றபாடுகளைப் பார்க்கும்

மூன்றாம் நகரவாசி:—நீ வசிக்குமிடம் எது?
நான்காம் நகரவாசி:—நீ விவாகமானவனோ, பிரமசாரியோ?
இரண்டாம் நகரவாசி:—எங்களொவ்வொருவருக்கும் நேரே விடைசொல்.
முதல் நகரவாசி:—ஆம், சுருக்கமாகவும்.
நான்காம் நகரவாசி:—ஆம், விவேகத்துடனும்.
மூன்றாம் நகரவாசி:—ஆம், உண்மையாகவும் சொல்வதே நல்லது; சாக்கிரதை. (2)
ஸின்னா:—என் பேரென்ன? எங்கு நான் ஏகுகின்றேன்? நான் வசிக்கும் இடம் எது? நான் விவாகமானவனோ பிரமச்சாரியோ? இன்னும், ஒவ்வொருவருக்கும் நேராகவும் விவேகமுடனும் உண்மையாகவும் விடைசொல்லவோ—(3) விவேகமுடன், நானொரு பிரமச்சாரி. (4)
இரண்டாம் நகரவாசி:—அப்படியென்றால் விவாகம் செய்துகொள்கின்றவர்களெல்லாரும் மடையர்கள் என்பது பொருள்: இதற்கு நீ என்கையில் பலத்த அடி வாங்க நேரிடும், தெரியுமா—(5) மேற்செல் நேராக. (6)
ஸின்னா:—நேராக நான் ஸீஸரின் மரணச்சடங்கிற்குச் செல்கின்றேன். (7)
முதல் நகரவாசி:—நண்பனாகவோ, பகைவனாகவோ?
ஸின்னா:—நண்பனாக.
இரண்டாம் நகரவாசி:—அவ்விடயத்திற்கு நேராக விடை கூறப்பட்டது.
நான்காம் நகரவாசி:—நீ வசிக்குமிடமோ—சுருக்கமாக.
ஸின்னா:—சுருக்கமாக, நான் நகரச் சபைமண்டபத்திற் கருகே வசிக்கின்றேன் (8).
மூன்றாம் நகரவாசி:—உன் பேரோ ஐயா, உண்மையாக?
ஸின்னா:—உண்மையாக என் பெயர் ஸின்னா.
முதல் நகரவாசி:—துண்டுதுண்டா யிவனைக் கிழித்தெறியுங்கள்; சதியாளர்களில் ஒருவனிவன். (9)
ஸின்னா:—நான் புலவன் ஸின்னா. நான் புலவன் ஸின்னா. (10)
நான்காம் நகரவாசி:—அவன் புன்கவிகளுக்காகக் கிழித்தெறியுங்கள், அவன் புன்கவிகளுக்காகக் கிழித்தெறியுங்கள். (11)
ஸின்னா:—சதியாளன் ஸின்னா அல்லன் நான்.
நான்காம் நகரவாசி:—அது பொருளில்லை; இவன் பெயர் ஸின்னா; இவன் இதயத்தினின்று இவன் பெயரைமாத்திரம் பறித்துக்கொண்டு இவனை அனுப்பிவிடுங்கள். (12)
மூன்றாம் நகரவாசி:—கிழியுங்கள் இவனை, கிழியுங்கள் இவனை! (13)எங்கே கொள்ளிக்கட்டைகள்! ஓகோ! கொள்ளிக்கட்டைகள் எங்கே! ப்ரூட்டஸ்ஸை, காஸ்ஸியஸ்ஸை, எல்லாரையுங் கொளுத்துங்கள்: சிலர் டெஸ்ஸியஸ் வீட்டிற்கு, சிலர் காஸ்க்காவின் வீட்டிற்கு; சிலர் லிகேரியஸ் வீட்டிற்கு: புறப்படுங்கள், போங்கள். [போகின்றனர்]

நான் விவேகமுடன் பிரமச்சாரியாகவே இருக்கின்றேன் என்று கூறலாம்—என்பது பொருள்.

(5) "விவேகமுடன் நான் பிரமசாரியா யிருக்கின்றேன்" என்று சொல்வதால், கல்லியாணமா யிருக்கின்ற என்னை இகழ்ந்து பரிகசிக்கின்றாயோ; இதற்கு உன்னை நையப் புடைப்பேன்—என்பது பொருள்.

(6) மேற் செல் நேராக—என்பது மேலே ஒழுங்காக உன் செய்தியைச் சொல்—என்பது பொருள்.

(7) எனினும் ஸின்னா விளையாட்டாக, "நான் நேராகச் செல்வது ஸீஸரின் மரணச்சடங்கிற்கே" என்று பதிற்சொல்கின்றான்.

(8) நீ வசிக்குமிடத்தைச் சுருக்கமாகச் சொல், என்பதைப் பரிகசித்து, "சுருக்கமாக நான் சபைமண்டபத்திற் கருகே வசிக்கின்றேன்" என்று விளையாட்டாகப் பேசுகின்றான்.

(9) ஸின்னா, என்ற பெயரைக் கேட்டவளவில், சதியாளர்களில் ஒருவனாகிய ஸின்னாதான் இவனென்று எண்ணிச் சனங்கள் பொங்கி எழுந்து அவனைப்பற்றிக் "கிழித்தெறியுங்கள்" என்று கூவிக்கொண்டே அலைக்கின்றனர்

(10) நான் புலவன்ஸின்னா, அந்தச் சதியாளன் ஸின்னா அல்லன், என்று கதறுகின்றான் பாவம் இவன்.

(11) புலவன் என்றாலே, ஜனங்களுக்கு ஒரு இகழ்ச்சியுண்டு. இவன் பாடிய புன்கவிகளுக்குத் தண்டனையாய்க் கொன்று விடுங்கள் இவனை, என்கின்றனர். இதனால் இவனது கவிகளின் திறத்தை அவர்கள் மதித்துப் பேசுகின்றனர் என்று எண்ணலாகாது.

(12) இவன்சதியாளன் ஸின்னாவாயிருந்தாலென்ன, புலவன்ஸின்னாவாயிருந்தாலென்ன? அதுபற்றி நமக்கு அவசியமில்லை. ஸின்னா என்ற பெயரொன்றிருப்பதே அவனைக் கொல்வதற்குப் போதுமானகாரணம்—என்று வெறிபிடித்துப்பேசுகின்றனர். இவன் இதயத்தினின்று இவன்பேரைமாத்திரம் பறித்துக்கொண்டு அனுப்பிவிடுங்கள்--என்பதன் குறிப்பு, "அவன் பெயரின் நினைவு அவன் இதயத்தில் இருக்கவேண்டும். அந்நினைவை நீக்கவேண்டுமானால் அவன் இதயத்தைப் பறிக்கவேண்டியதுதான்—அப்படி இதயத்தைப்பறிக்காமல் பேரைமாத்திரம் நீக்கக் கூடுமானால் நீக்குங்கள்—என்பதாம்.

(13) ஜனங்களின் மூர்க்கத்திற்குக் கரையில்லை. சரித்திரத்தின்படி சனங்கள் இப்புலவன் ஸின்னாவை வதைத்துக் கொன்றுவிட்டனர்என்பது தெரிகின்றது.எனினும் அந்தத் துயரக்காட்சியை ஷேக்ஸ்பியர் களத்தில் காட்டாததுமன்றி, ஒருவேளை பிறகு அவனைக்கொல்லாமல் இவர்கள் விட்டுவிட்டிருப்பினும் இருக்காலம் என்ற சந்தேகத்துடனேயே முடித்துவிடுகின்றார்.

மூன்றாம் அங்கம் முற்றிற்று.

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

[467-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து—2-ம் தசகம்.

7-ம் பாசுரம்.

எஞ்ஞான்றாகா யிருந்திருந் திரங்கி நெஞ்சே
மெய்ஞ்ஞான மின்றிவினை யியல்பிறப் பழுந்தி
எஞ்ஞான்று மெங்கு மொழிவற நிறைந்துநின்ற
மெய்ஞ்ஞானச் சோதிக் கண்ணனை மேவுதுமே.

நெஞ்சே! மெய்ஞ்ஞானமின்றி, வினையியல் பிறப்பு-கருமத்தாலுண்டான ஜன்மத்திலே,அழுந்தி-அழுந்திக் கிடக்கின்ற (நாம்), எஞ்ஞான்றும்-எல்லாக் காலமும், இருந்திருந்திரங்கி-நிரந்தரமாக இருந்து துக்கப்பட்டு, எஞ்ஞான்றும்-எப்பொழுதும்ஒழிவற-இடைவிடாது, நிறைந்து நின்ற மெய்ஞ்ஞானசோதிக் கண்ணனை-உண்



மையான பூர்ண ஞானமுற்ற கிருஷ்ணபகவானை, மேவுதுமே - அடைவோமோ? அடையமாட்டோம்.

8-ம் பாசுரம்.

மேவு துன்ப வினைகளை விடுத்துமிலேன்
ஓவுத லின்றி யுன்கழல் வணங்கிற்றிலேன்
பாவு தொல்சீர்க் கண்ணாவென் பரஞ்சுடரே
கூவுகின்றேன் காண்பா னெங்கெய்தக் கூவுவனே

மேவு-ஆத்மாவோடே அநாதியாய்க் கர்ம பரிபக்குவத்தால் சேர்ந்திருக்கிற, வினைகளை - துக்கத்தை விளைவிக்கும் கர்மங்களை, விடுத்துமிலேன் - அவைகளின் பயன் வருத்தாதே நான் விடுவித்துக்கொள்ளவில்லை. ஓவுதலின்றி - இடையீடு இல்லாமல், உன்கழல்-உன் திருப்பாதங்களை, வணங்கிற்றிலேன் - வணங்கிவரவில்லை. பாவு - எங்கும் பாவிப் பிரவஹித்தமா யிருக்கின்ற, தொல் - பழமையான, சீர்-புகழ்பெற்ற, கண்ணா - கிருஷ்ணனே, என் பரஞ்சுடரே - அஸாதரணமான வடிவு அழகு தேஜஸ்ஸுடையவனே, காண்பான் கூவுகின்றேன் - காணும்பொருட்டு அழைக்கின்றேன். எங்கு- பயன்படும்படி, எய்த-உன்னையடையும்படி, கூவுவன் - அழைப்பேன். முடியாத காரியம்.

குறிப்பு:—இப் பாசுரம் கீதாசாஸ்திரத்தின் கருத்துக்களை அநுஸரித்து விஸ்தரிக்கிறபடி. பரிசுத்தஆத்ம சுவரூபம் தியானத்துக்கு எட்டவேணுமானால் கர்மயோகமாவது ஞானயோகமாவது சித்தியடைய வேணும். இச்சித்திக்கு முக்கியமான தடை பாபகர்மங்களினின்றும் மனம் தலைசாய்ந்து அவைகளினின்றும் நிவர்த்திப்பதே. பரிசுத்தாத்ம சுவரூபம் ஒருவாறு எய்தினாலும் அநவரதம் பகவானை வழிபட்டு அர்ச்சித்துப் பூஜை செய்து அவனிடம் நிரந்தர பக்தியும் பிரியமும் வைக்கவேண்டும். கர்மயோகம் ஞானயோகம் சித்தியாகிப் பக்தியோகத்தில் உய்த்துச் செல்லுமேல் பகவானைக் கூவினால் தரிசனம் கிடைக்கும். இப்படி நான் செய்யாமல் அவனை வரச்சொல்லி விளித்தால் அதில் என்ன காரியம், ஒரு பயனுமில்லை; என்று ஆயாசித்துக் கூறியபடி.

9-ம் பாசுரம்.

கூவிக் கூவிக் கொடுவினைத் தூற்றுணின்று
பாவியேன் பலகாலம்வழிதிகைத் தலமருகின்றேன்
மேவியன் றாநிரை காத்தவ னுலகமெல்லாந்
தாவிய வம்மானை யெங்கினித் தலைப்பெய்வனே.

பதக்குறிப்புக்கள்:-கொடுவினைத் தூற்றுள்-கொடிய கர்மங்களாலுண்டாகி அடிக்கடி பல பிறவியாய்ப் பிறந்திறந்து ஸம்ஸரிக்கையாகின்ற, தூற்றுள் - கொடிய விலங்குகள் பதுங்கிக்கிடக்கும்இருட்டுக்குகையினுள் நுழைந்தால் திரும்பிமீள வொண்ணாததுஎன்று தாத்பரியம். சம்சாரத்தில் வீழ்ந்தால் வெளிவர வழிதெரியாமல் அதிலேயே சுழன்று கிடக்கையைக் கருதி. "நின்று" அதாவது ஒரே இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டேன் என்கிறார். உன்னை எங்குத் தலைப்பெய்வேன்- எங்கே அடையப்போகிறேன் - அடையமாட்டேன் இது நிச்சயம், என்கிறார்.

பொழிப்புரை:--வெளிப்புறப்பட வழியறியவொண்ணாதொருபடி நிரம்ப துக்கங்களைவிளைவித்துக்கொண்டிருக்கும் கர்மவினைகளின் சம்சாரத்துள் தயங்கிநிற்கும் பாவியேன் பலகாலும் கூவிக்கூவி எம்பெருமான் திருவடிகளில் சேர வழிதெரியாதே திகைத்து அலமருகின்றேன். திருவாய்ப்பாடியிலே ஸர்வசுலபனாய் வந்து வளர்ந்தருளினவன் திருவடிகளிலே சேரப்பெற்றிலேன். இதற்குக் காரணம் நான் வேறொரு தேசவிசேஷத்திலே உழன்றதின் நிமித்தமா யிருந்திருக்கக்கூடும். இது ஸம்பாவிதமாகாதோ வென்னில் ஸர்வதேசவர்த்திகளான ஸர்வாத்மாக்களும் உன் திருவடிகளினுள்ளேயகப்படும்படியுலகமெல்லாம் தாவியருளின அன்றும் உன் திருவடிகளைச் சேரப்பெற்றிலேன்; அன்றுகூடச் சேராதநான் என்று சேரப்போகிறேன்.

விசேஷக்குறிப்பு:—ஆறாயிரப்படி உரைகாரர் இரண்டு அம்சங்கள் கூட்டி இப்பாட்டுக்கு உரை பூர்த்தி செய்கிறார். அதாவது (1) சேராதொழியில் இவ்வாத்மா முடிகை நிச்சயம், இனிபவனுடைய ஈச்வரத்துவம் கலந்து முடிவு ஏறாமல் ஒழியும் (2) இனி ஆத்மாமுடியும் வரையில் அவன் திருவடிகளைச் சேருகை யென்றொருபொருளில்லை என்று நசையற்றுக் கூப்பிடுகிறார்" (1) இப் பாசுரத்தில் "அம்மானை" எங்கு அடைவேனென்பதால் தான் அடிமையாகவும் அவன் ஸ்வாமியாகவு மிருக்கும் சம்பந்தத்திற்கு அவனை அடையாவிடில் பங்கம்வரும். அப்படிப்பங்கம்வந்தால் அவனது ஈசுவரத்துவத்துக்குப் பங்கம் வருமென்று திருவுள்ளம். இந்தக் குறைவை ஸஹிக்காமல்தான் அடுத்த பாசுரத்தில் தாம் அவனைப் பிறிந்திருக்கிற துக்கத்தையும் சேர்த்து "எல்லா அல்லல்களும் அகல" தாம் கண்ணனைக் கண்டுகொண்டேனென்று அருளிச்செய்கின்றார். (2) ஆழ்வார் இப்பாசுரத்தில் அவனைச் சேருகிறதாகிய புருஷார்த்தம் தனக்கு ஒருக்காலும் ஸம்பவியாதென்று ஆசையை விட்டொழிக்கிறார். இத்தசகத்தின் முதல்பாசுரத்தின் விசேஷக் குறிப்பிலேயே மற்ற வியாக்கியானகாரர், ஆழ்வார் முதலிலேயே நசையற்றுக் கூப்பிடுகிறாரென்று உரையிட்டிருப்பது ஸரியல்லவென்று குறித்துள்ளோம். அதை இங்குத் திரும்பிக் கண்டுகொள்க. ஆழ்வார் தாம் திருமலையில் கண்ணனைக் கண்டுகொண்டதால் தம்முடை மனஸானது நிலையடைந்த தென்றும் தம் ஆத்மா அவனையடைந்து உஜ்ஜீவியாதே நசித்துப்போம் என்ற பயம் தீர்ந்து அவனைத் திருமலையில் மானஸமாய் அடைந்ததால் நித்தியத்துவத்தைப் பெற்றதென்றும் அடுத்த பாசுரத்தில் கூறப் புகுகிறார். பலசுருதி பாசுரத்திலும் தன்னை யகப்பட "உயிர்கொள் எல்லா உலகுமுடையானை" என்று உரைக்கின்றபடியால் அவனை அடையவேணுமென்ற ஆசை தலைக்கெட்டியதென்று நாமறிகிறோம்.

10-ம் பாசுரம்.

தலைப்பெய் கால நமன்றமர் பாசம்விட்டால்
அலைப்பூ ணுண்ணுமவ் வல்லலெல்லா மகலக்
கலைப்பல் ஞானத்தென் கண்ணனைக் கண்டுகொண்டு
நிலைபெற் றென்னெஞ்சம் பெற்றது நீடுயிரே.

குறிப்புக்கள்:--நமன் தமர்-யமபடர்கள், பாசம் விட்டால் - கயிறு எறிந்து உயிர்களை வலித்தால், உயிர் - என் ஆத்மா, நீடு பெற்றது - பகவானை அடைந்ததால் அவனுடன் ஒத்துவாழும் தீர்க்கத்தை யடைந்தது. அடுத்த தசகத்தில் "திருவேங்கடத் தெழில்கொள் ஜோதி"க்குத் தாம் ஸகல அடிமையும் செய்ய உத்தேசிக்கிறபடியால் தாம் இங்குக் கண்ட கண்ணன் அத் திருவேங்கடமுடையானென்கிற அர்த்தமாகிறது.

பொழிப்புரை :—உத்கிராந்தி வியசம்போல் அதி கோரமாயும் துஸ்ஸஹமாயுமிருந்த, என்னுடைய பகவானை விட்டகலுகையாகிற வியசனமும் அவனுடைய சர்வேசுவரத்துக்கு வைகலியம் வருகிறதென்றுள்ள மஹாபயமும் கிலேசமுமில்லாமல் எல்லாம் போய் நெஞ்சம் நிலைநின்று என்னுடைய ஆத்மாவும் நித்தியாம்படி பலபக்தியோகக் கவடுகளாலேயேசேரக்கூடிய எம்பெருமானைத் திருமலையிலே கண்ணாலே காணப்பெற்றே னென்கிறார்" —ஆறுயிரப்படி.

### 11ம் பாசுரம்

உயிர்கொ ளெல்லா வுலகமு முடையவனைக்
குயில்கொள் சோலைத் தென்குருகூர்ச் சடகோபன்
செயிரில் சொல்லிசைமாலை யாயிரத்து ளிப்பத்து
முயிரின் மேலாக்கை யூனிடை யொழிவிக்குமே.

பதக்குறிப்பு:—செயிரில் - தோஷமில்லாத, இசைமாலை—கானரூபமானமாலை, உயிர்மேல்-ஆத்மாவைச் சூழ்ந்திருக்கிற, ஊனிடையாக்கை - மாம்சங்களின் மத்தியிலுள்ள தேஹத்தை, ஒழிவிக்கும் - போக்கடிக்கும். இனிச் சம்சாரமில்லை என்றர்த்தம். பிருகிருதிசம்பந்தம் பகவானைப் பூரணமாய் அநுபவிக்க விரோதியாய் நிற்பதைப் போக்கிவிடுமென்பது கருத்து. "இப்படி யாழ்வார் ஊராகுகையாலே எம்பெருமானுடைய சர்வேசுவரத்துவமும் அழியாதொருபடி திருநகரியும் அடங்க நிறைவுபெற்ற தென்கிறார்"—ஆறுயிரப்படி.

# ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[468-வது பக்கத் தொடர்ச்சி]

## 10. சிறுதேர்ப் பருவம்.

குங்கும மணிக்கலச விளமுலைப் பொற்றொடிக்
குறுநகைப் பசியவேய்த்தோட்
கோகனக மலர்முகப் பிறைநுதற் சுருள்குழற்
குதலையந் தீஞ்சொற்சினம்
பொங்குமர வின்படம் புரையுமக லல்குற்
பொலன்சிறக ரோதிமநடைப்
புனைமடற் கமுகுமிட றரிபரந் திருகுழை
பொருங்கரு நெடுங்கடைவிழி
தங்குமிள வாழைக் குறங்கலத் தகவடித்
தளரிடைச் சுழிகொளுந்தி
தளிரியற் புருவவில் வள்ளைவார் குழையொளி
ததும்புசெம் மணிமேகலை
செங்குமுதமெல்லிதழ்க்கோவியர்க்குறுதுணைவ
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுபுகழ் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தியருளே. 1.

வஞ்சினக் கருமனக் கஞ்சமா மன்சிலை
மகங்காண வருகவென்ன
வந்தகாந் தினிமகன் தேர்விடக் காளிந்தி
மாநதிக் கரைசென்றவன்
அஞ்சனப் புனல்படிந் தாடவந் நீரினிடை
யாயிரம் படநாகமேல்
அறிதுயிற் கொளுமுருவ மொன்றுகண் டதிசய
மடைந்துகரை யேறவங்கு
மஞ்சினைத் தொடவுயர் மணிக்கொடித் தேரினு
மலர்க்கண் களிப்பநோக்கி
வந்தனை புரிந்துதுதி செய்யநீ செயுமாயம்
வானவர்க் குணரலாமோ
சிஞ்சிதப் பரிபுரச் சேவடிப் பரமனே
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுபுகழ் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தியருளே. 2.

கார்நடத் துங்கொடைக் கன்னனும் விசயனுங்
காதுசம ராடுபோதிற்
கனலினுக் கமுதூட்டு நாளுடல் வெதுப்புறுங்
காரணப் பகையுடைமையாற்
போர்நடத் துஞ்சிலைக் கழன்முகப் பகழியாய்ப்
போதருங் கருமிடற்றுப்
பொறியுடைப் பணவரவு வெம்பிவரு மாகண்டு
பூமக ணெகிழ்ந்துதாழப்
பார்நடத் துந்திருப் பதகமல மூன்றியப்
பாண்டவர்க் கரசுநல்கிப்
பாந்தள்வெங் கொடியவன் குலமடங் கலுமறப்
படையொன்று கைக்கொளாது
தேர்நடத் துந்தொழிற் கண்ணமணி வண்ணனே
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுபுகழ் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தியருளே. 3.

பாராதி யைம்புலனு மைந்துநிலை யென்புதோற்
பசுநரம் பூன்றசையெலாம்
பருவாணி சிற்றாணி பலகைமேல் விரியாடை
பகருமிரு வினையுமச்சு
போராத வாருயிரு மனமுதற் பொறியும்
பெரும்பரியு மூர்வலவனும்
பிறப்பிறப் பின்பதுன் பங்களும் நான்குருள
பெயர்பெற்ற மாயைவீதி
ஆராத கருமவிந் திரியமோ ரைந்துமேல்
அமரலங் காரமேன்மேல்
ஆசையொரு மூன்றுமே யோட்ட மிவ்வாறு
சீவான்மா வனந்தமுமொரோர்
தேராக்கி யவைகளை நடத்திவிளை யாடுமால்
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுபுகழ் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தியருளே. 4.

வெங்கதிர்மு னின்றிரத முன்செலப் பின்னேறு
விஞ்சைகள் பயின்றவனுமான்
வேதண்ட மன்னதிண் டோணிற்ப வாசவன்
விடுத்திடு தடந்தேர்மிசைத்
துங்கமர கதமணிப் பெருவரை யெனநின்று
தோளொருபதிரு நிருதர்கோன்
தொகையுடை முடிச்சிரம் பத்துமற் றற்றுமேற்
றோன்றுதல் வியந்துநோக்கிப்
பங்கய னயிற்கணைக் கவனுயிர்ப் பலியீந்து
பட்டவா னரருமுய்யப்
பைந்தொடி யுடன்மலர் விமானத் தயோத்தியம்
பதியடைந் துலகோர்தொழச்
செங்கதி ரவன்குலந் தழையவர சாளுமுகில்
சிறுதேர் நடத்தியருளே
தெய்வம் பராவுபுகழ் வைகுந்த நாதனே
சிறுதேர் நடத்தியருளே. 5.

வேறு.

மன்றல் நடத்து மலர்களெல்லாம்
வண்டு நடத்துஞ் செழுங்கமல
வாவி நடத்துஞ் சிறையெகின
மடுவு நடத்துந் தவளசங்கம்
குன்ற நடத்து முருக்களிறு
கொடுவெஞ் சினமும் மதநடத்துங்
குலவும் பரியைங் கதிநடத்துங்
கொடிகொள் மருங்கு விழாநடத்தும்
ஒன்ற நடத்தும் பருவமின்னார்
உள்ளம் நடத்தும் அனங்கன்வெம்போர்
உயர்பொன் மதில்கார் முகினடத்து
முலக நடத்தும் நீதிதண்காற்
றென்ற னடத்தும் வெண்ணெய்நல்லூர்ச்
செல்வ சிறுதேர் நடத்துகவே
செழிக்கு மலர்மேன் மங்கைமகிழ்
திருமால் சிறுதேர் நடத்துகவே. 6.

மலையை வளைக்கு முலையுருக்கு
மணியைத் திணிதோட் சிசுபாலன்
மன்றல் விளைக்க வரவங்காள்
மடங்கல் விடுத்த முடங்கல்முந்நூற்
கலையை வளைக்குங் கிழமறையோன்
காட்ட வுணர்ந்து தடந்தேர்மேற்
கவுரி வளைப்பிற் கவர்ந்துசெல்லக்
கறுவிச் சமரா டுருக்குமியைத்
தலையை வளைக்குஞ் சிகையைந்தாய்ச்
சசிவாய்ப் பகழி விடுத்திறுகத்
தடந்தேர்க் காலிற் பிணித்தெதிர்ந்த
தரணி பாலர் குலைந்தோடச்
சிலையை வளைக்கும் வெண்ணெய்நல்லூர்ச்
செல்வ சிறுதேர் நடத்துகவே
செழிக்கு மலர்மேன் மங்கைமகிழ்
திருமால் சிறுதேர் நடத்துகவே. 7.

சிறக்கும் வடநூன் மொழியதனை
னிகழ்த்தும் வில்வப் பெயர்முனிவன்
நெடுநாண் முயன்ற தவத்தினுக்கு
நீவேண் டுவன வுரையென்ன
மறக்குங் கருத்தி னடியனுக்கு
மச்ச முதலாய்ப் பரியீறாய்
வடிவம் பத்துங் கண்டுதொழ
வரவேண் டுமெனப் பணித்தலுமே
பறக்கும் பறவைக் கரசன்மிசைப்
பதும மடந்தை புவிமடந்தை
பக்கம் நிற்ப முனிவர்விண்ணோர்
பரவைப் புவனந் தழைப்பநன்மை
சிறக்கும் வெண்ணெய்ப் பதியுவந்த
செல்வ சிறுதேர் நடத்துகவே
செழிக்கு மலர்மேன் மங்கைமகிழ்
திருமால் சிறுதேர் நடத்துகவே. 8.

மனையு மதிலு மாதங்கம்
மறுகெங் கணுமா மாதங்கம்
வாவி தொறுநந் தனவனங்கள்
வாடை செறிநந் தனவனங்கள்
நினையற் கரும்வான் றொடுந்துவசம்
நிறைகற் புடையார் தவதுவசம்
நிதிபூண் சொரியு மெவர்கரமும்
நிகரன் றிமையோர் பொனகரமும்
புனையு மணியா லிருள்விளங்கும்
புத்தேள் விழாக்கள் மிகவிளங்கும்
பொழியுஞ் செல்வந் திருவனிதை
போதன் றனே புகழ்வனிதைத்
தினமுஞ் செழிக்கும் வெண்ணெய்நல்லூர்ச்
செல்வ சிறுதேர் நடத்துகவே
செழிக்கு மலர்மேன் மங்கைமகிழ்
திருமால் சிறுதேர் நடத்துகவே. 9.

வேறு.

நல்வருண நான்கிலுள மானிடவர்
தந்தொழி னடத்தியுயர் புகழ்தழைப்ப
நன்மைபெறு திருமுனைப் பாடிநா
டெங்கணும்நாளும்விளைசெந்நெலோங்கப்
பல்வகைய மணிகளுஞ் சாந்துமகி
லும்மலர்ப் பந்தியுஞ் சிந்தியலையிற்
பாவையர்க ளுந்திவரு பெண்ணைமா
நதிபுனல் பாந்துகுறை யாதுபெருகக்
கல்விநிறை மாந்தருங் கற்புநிறை
மங்கையர் கணங்களும் வயமைந்தருங்
கனகமணி மேடையுந் தேவர்மங்
கலவிழாக் காட்சியும் நனிசிறந்து
செல்வம்வளர் வெண்ணெயம் பதிதழைய
மருவுமுகில் சிறுதேர் நடத்தியருளே
தேவாதிதேவ வைகுந்த நாயக
வாழிசிறுதேர் நடத்தி யருளே. 10.

சிறுதேர்ப்பருவ முற்றிற்று.

திருவெண்ணெய் நல்லூர்
வைகுந்தநாதர் பிள்ளைத் தமிழ் முற்றிற்று.



எமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலா நிலயம். வேளாளர் வீதி. புரசைபாக்கம். சென்னை. விலை ரூ.

199139

m211,N28K.N

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[476-வது பக்கத் தொடர்ச்சி]

ஒன்றேன் றில்லா வோரகத்தி வாழ்க்கை நன்றே.

சோரிபெருகுபுழைமூக்கொடு புலம்பிவிழுமச்சழக்கி
யைக் காணுமுன்னம்,'பெண்ணுட்டமொட்டேன்
இப்பேருலகில்'' என்றொருநாள் முழக்கியவவ் விளங்
கோவின் காரியமே இதுவாகும் எனவுணர்ந்து, பண்டி
வளை யறியாதான்போல், 'நீ யார்' என இராமன் வின
வுதலும், முதல்நாள் தன்னை யறிமுகஞ்செய்துவைத்து
க்கொண்டவாறே மீண்டும், "இராவணனுக் குடன்பி
றந்தேன்யான்'' என்றனள். பெருமிதத்துடனவள் தன்
பிறப்புணர்த்திய குரலிற்கிணங்க இராமன், வினயமிக
வுடையவன்போல், "யாமிருந்த சூழற்கு என்செய வந்
தீர்'' எனப் பலர்பாலின் மரபுபூண் டுரையாட, இவ்
வொருநாளகவயின் தன்னை இவன் மறந்தனனே என
வியந்த சூர்ப்பணகை, "எரிகின்ற கரியென்ன வருந்
தும்என் கொடியகாமனோய்க் கிணையில்லாவோர் மருந்
தே, நெருநலினும்வந்திலெனோயான்'' என்றியம்பி யே
ங்கினள். இதனைக் கேட்ட இராமன் இறும்பூதுமிக
எய்தித் "திருமகளிவரென்ன நெருனல் நடந்தவரோ
நீர்''எனவினவுதலும் சூர்ப்பணகை சிறிதுந்தாழாமல்,

> கொங்கைளுங் குழைக்காதுங்
> கொடிமூக்குங் குறைத்தழித்தால்
> அங்கணரசே யொருவர்க்
> கழியாதோ வழகென்றாள்

[அழகிய கண்களையுடைய அரசனே, கொங்கைகளையும்
குழையை அணிந்த காதுகளையும் கொடிபோன்ற மூக்கை
யும், அறுத்து அழித்துவிட்டால், ஒருவருக்கு அழகுதான்
அழியாதோ—என்றாள்]

என்றலும், மூர லரும்பினனுப் இலக்குவனை நோக்கி,
"வீர, விரைந்தனை, இவள்தன் விடுகாதும் கொடிமூக்
கும் ஈரமினைந் திவள்இழைத்த பிழை என்'' என வின
வினன். "வீரவிரைந்தனை'' எனவுரைத்தசொல்லினுங்
குரலினும் இலக்குவன் பொறுமையின்றி இதுபுரிந்து
விட்டான் என்னுஞ்சலிப்புச் சிறிதிருந்ததோ இல்லை
யோ யாமறியோம்."பெண்ணொருத்தியின் மூக்கையும்
முலையையும் அறுத்தவீரனே'' எனறவஞ்சப்புகழ்ச்சி
அதனிலடங்கியிருக்குமாயின் இளையோனதனைஉணர்
ந்துகொண்டானல்லன். தன் செய்கைக்குரிய காரணத்
தினுண்மையைக் கழறுவானாகி "வாளெயிற்றிற் றின்
னவோ, தீவினையோர் கூட்டந்தான் புறத்துளதோ;
குறித்தபொருள் அறிந்திலேன். நம் நல்லாளை அப்
பொல்லாள் துரத்தியதால் இது நான் செய்தேன்''
என எடுத்துக்காட்டினன்.

> ஏற்றவளை வரிசிலையோ னியம்பாமு னிகலரக்கி
> சேற்றவளை தன்கணவ னருகிருப்பச் சினந்திருகிச்
> சூற்றவளை நீருழக்குந் துறைகெழுநீர் வளநாடா
> மாற்றவளைக் கண்டக்கா லழலாதோ மனமென்றாள்

[வளைந்த வரிகளமைந்த வில்லையுடைய இலக்கு
வன் அதனைச் சொல்லாமுன் கொடிய அந்தஅரக்கியான
வள்,"சேற்றிலுள்ள பெண்சங்கானது,ஒரு ஆண்தவளையின்
அருகிலிருப்ப, அதனைக்கண்டு, சூல்கொண்டிருக்கின்ற பெ
ண்தவளை, தன்கணவன் பக்கத்தில் அப்பெண்சங்கு வரு
வானேன் என்று கோபம் கொண்டு, நீரைக் கலக்குகின்ற
துறைகளின் வளப்பம்மிகுந்த நாட்டையுடையவனே,—சக்
களத்தியைக் கண்டால் மனம் கொதியாதோ-(ஆகையால்
அவ்வாறு செய்தேன்) என்றாள்.]

நன்றாயிருக்கின்றது நியாயம்! இராமனுக்குத் தான்
மனைவியாகாமுன்னம்,சீதையைத் தனக்குச் சக்களத்தி
யாக்கிக்கொண்டாள். இறைச்சியொன்றிருக்கவேண்டு
மாயின், சூற்றவளை நீருழக்குஞ் சித்திரந்தானிச் சழக்
கியின் நினைவிற்கு வரவேண்டுமோ! அது இயற்கைப்
புணர்ச்சிக்கேனு மேற்றதாயிருக்காமல் ஆண்தவளைக்
கயலிருக்கும் பெண்சங்கைக் கண்டோ அச் சூற்ற
வளை அவ்வியங் கொள்ளல்வேண்டும்! தின்னும் இ
றைச்சியேயன்றித் தீட்டும் இறைச்சியும் இவ்வரக்கிக்
கு இப்படியே இழிந்ததாயின. மாற்றவளைக் கண்டுமன
முழல்வன கோசலத்தி லில்லாமற்போகவில்லை.

> தாவிற்பொற் றலத்தினற் றவத்தினோர்கள் தங்குதாள்
> பூவுதிர்த்த கற்பகப் பொதும்பர்புக் கொதுங்குமால்
> ஆவியொத்த வன்புசேவல் வந்துகூவ வணைந்திடா
> ஓவியப் புறவின்மா டிருக்கவூடு பேடையே

எனப் புறவின் இனிய மெல்லிய ஊடலைத் தன் கண்க
ளால் கண்ட கம்பரே, சூர்ப்பணகையின் கண்களைக்
கொண்டு காணவைக்குங்கால் சூற்றவளை நீருழக்கும்
தோற்றந்தான் தோன்றும்படி செய்கின்றார். இதுவே
நாடகத் தியற்கை.

சூற்றவளைக்குஞ் சூர்ப்பணகைக்கும் ஓர் வேறுபாடு
உளது. அம்மண்டூகம் தான் இருந்த இடத்திலிருந்து
நீரினை உழக்கலாயிற்று; சூர்ப்பணகையோ சீதையைப்
பற்றிக் கொடுபோகப் புக்கனள். முன்னைநாள், "இளை
யோன் முனியும் எகுதி'' என்று மெல்ல விலக்கினன்
இராமன். அவ்விளையோன் தான், மூக்களவுமுலையளவு
முனிந்துமாயிற்று; அவளோ இன்று அன்புஇரட்டிவி
ட்டாள். ஆதலின், "அரக்கர்குலத்தை ஒருங்கவிப்பா
ன் வந்துளேன்; தீமாற்றம் சிலவிளம்பி வீடிப்போகா
தே; இம்மெய்வனத்தை விட்டகல வோடிப்போ'' என
இராமனுங் கடிந்துரைக்க வேண்டியவனாயினன். சலித்
திலள் சூர்ப்பணகை. இனி இவர்களை மருட்டிவெருட்
டி வரிக்கலாம் எனப்பார்க்கின்றாள். "ஏ, மதியிலிகாள்,
நான்முகனே முதலாய அமரர்களெல்லாரும் இராவண
ற்குக்கடனிறுக்குங் குடியாவர். ஆதலின் விரையுமிது
நன்றன்று. நுமக்குறுதி யுரைக்கின்றேன். உணர்வுள
தேல்கேண்மின்'' எனப் பாயிரங்கூறி

> ஆக்கரிய மூக்குங்கை யரியுண்டா ளென்றுரை
> நாக்கரியுந் தயமுகனார் நாகரிக மல்லாமை
> மூக்கரிந்து நுங்குலத்தை முதலரிந்தீ ரினியுமக்குப்
> போக்கரிதிவ் வழகையெல்லாம் புல்லிடையே யுகுத்
> [தீரே

[உன் தங்கை, 'மறுபடி உண்டாக்கிக்கொள்ளமுடியாத
மூக்கு அறுபட்டாள்' என்ற செய்தியை வந்து சொன்னவர்
களையும் நாக்கை அறுத்துவிடுவோனாகிய இராவணன், அக்
காரியத்தையே செய்த உங்களிடத்துச் சிறிதும் இரக்கம்
வைக்கமாட்டானுகையால் என்னை மூக்கறுக்கும் காரியத்
தால் உங்கள் குலத்தையே வேரோடும் அறுத்துக்கொண்டு
விட்டீர். இனி உங்களுக்கு உயிர்பிழைத்துப் போகும் வழி



யில்லை. வீணுக இவ்வழகை யெல்லாம் புல்லிலே போட்டு
விட்டீரே]

என்னுமிவள் இறுதியில் இரங்கியது தன் னழகிற்
கோ அவரழகிற்கோதெரிந்ததில்லை. ஆதலின்,"என்னை
யுயிர் நீர்காக்கின் யான் காப்பென் அல்லால் அவ்விரா
வணனார்உளர்'' என்று'பூச்சாண்டி'காட்டி"யாவர்க்கும்
வலியாள் யான் என்று இளையானுக்கு இயம்பீரோ''
என்பவளாய்,

> [லேன்
> மாப்போரிற் புறங்காப்பென் வான்சுமந்து செலவல்
> தூப்போலக் கனிபலவுஞ் சுவையுடைய தரவல்லேன்
> காப்போரைக் கைத்தென்னீர் கருதியது தருவேனிப்
> பூப்போலு மெல்லியலாற் பொருளென்னோ புகலீரால்

[பெரிய போர்களில் உங்களைக்காப்பேன், ஆகாய மார்க்
கத்தில்உங்களைச் சுமந்துசெல்லவல்லேன். மாமிசம்போன்ற
சுவையுடைய பழங்கள் பல கொடுக்கவல்லேன், வேறெது
நீங்கள் வேண்டினும் தருவேன்; இப்படி உங்களைக்காக்க
வல்ல என்னை நீங்கள் வெறுப்பதால் என்ன பயன்? என்
னை வெறுத்து, இந்தப் பூவைப்போன்ற மெல்லியலாளால்
என்ன பயன் பெறுவீர், சொல்லுங்கள்'']

என்னுமளவில், போர்த்துணைவி என்பதன்றியே பாய
ற்றுணைவியுந் தானாதற் குரியாளென்பதை உணர்த்து
மொரு வூக்கமுடன்,

> குலத்தாலு நலத்தாலுங் குறித்தனவே கொணர்தக்க
> வலத்தாலு மதியாலும் வடிவாலு மடத்தாலு
> நிலத்தாரும் விசும்பாரு நேரிழையா ரென்னைப்போற்
> சொலத்தானிங் குரியாரைச் சொல்லீரோ வல்லீரேல்

[குலத்தினாலும் செல்வத்தினாலும் குறித்ததைக் கொண்டு
வரக்கூடிய வல்லமையினாலும், வடிவழகினாலும் இளமை
யாலும், எனக்கு நிகரான மகளிரை, இவ்வுலகிலும் தேவ
லோகத்திலும், இயலுமாயின் சொல்லத்தான்சொல்லுங்கள்
பார்ப்போம்.]

என்று பெருமிதம் பேசிவருமளவிலேயே, நேற்றிருந்த
மூக்கு இன்று தனக்கிருக்கவில்லை என்பது அவள்
நினைவில் வருதலும்,

> போக்கினீ ரென்னாசி
> போய்த்தென்னீர் பொறுக்குவிரேல்
> ஆக்குவெனோர் நொடிவரையி
> னழகமைவெ னருள்கூறும்
> பாக்கியமுண் டெனினதனாற்
> பெண்மைக்கோர் பழுதுண்டோ
> மேக்குயரு நெடுமூக்கு
> மடந்தையர்க்கு மிகையன்றோ

[என் மூக்கினை நீங்களே அறுத்துப் போக்கினீர்; ஆகை
யால் அது போயிற்றென்று நீங்களே மறுபடியும் இகழ்வது
தகவன்று. அதுவுமன்றி, என்னை ஏற்றுக்கொள்வீராயின்,
ஒரு நொடிப்பொழுதில் அம்மூக்கை மறுபடி ஆக்கிக்கொ
ண்டு அழகுடையவளாய் அமைவேன். நீங்கள் என்னிடத்தில்
அன்புபேசிப் பாராட்டும் பாக்கியம் பெற்றேனாயின் இம்மூக்
கில்லாமையால் பெண்மைக்கு ஒரு பழுதுண்டாகுமோ! மே
லே நிமிர்ந்துநிற்கும் பெரிய மூக்கும் பெண்களுக்கு மிகை
தான் அன்றோ]

என எடுத்துக் காட்டுகின்றாள். இரண்டிலொன்று
பொய். சற்றுமுன், 'ஆக்கரியமூக்கு' என்ற இவளே
இப்பொழுது, "ஆக்குவென் ஓர் நொடிவரையில்'' என்
கின்றாள். இவை யிரண்டில் முன்னதன் கண்ணே
மெய்ம்மை உளதென்றயிர்க்க விடமுளது. ஒரு நொடி
யில் இழந்த மூக்கை வளர்த்திக்கொள்ள இயல்பவளா
யின், அது செய்யாமல், மூக்கொன்று இன்மையே
மேதக்கதென வற்புறுத்தப் புகுவானேன்! வாலிழந்த
அச் சிறுநரியின் வாய்பாட்டால், "மேக்குயரு நெடு
மூக்கு மடந்தையர்க்கு மிகையன்றோ'' என வாதிக்கத்
துவக்குகின்றாள். அதுவுமன்றி,

> விண்டாரே யல்லாரோ வேண்டாதார் நான்வேண்டி
> னுண்டாய காதலினென் னுயிரென்பது மதன்றோ
> கண்டாரே காதலிக்குங் கட்டழகும் விடமன்றோ
> கொண்டாரே கொண்டாடு முருப்பெற்றாற் கொள்ளீ
> [ரோ

[மனத்திற்குப் பிடிக்காதவர் அல்லரோ வேண்டாதவர்;
அப்படிக்கன்றிக் காதலுடன் என்னை வேண்டுவீராயின்,
என்னுடைய உயிரும் உங்களுடையதாகாதோ! பார்த்தவர்
கள் பார்த்தமாத்திரத்தில் ஆசைப்படும்படியான கட்டழ
கும் விஷம்போல் முடியலாமே. மணம்செய்துகொண்டவர்
மாத்திரம் கொண்டாடத்தக்கவோர்வடிவத்தைப் பெற்றால்
என்னை ஏற்றுக்கொள்ள மாட்டீரோ]

எனக் குள்ள நரியின் குரலேயன்றி, "பார்யா ரூபவதீ
சத்ரு'' என்ற பர்த்ருஹரியின் கருத்தமைந்த வாக்கை
யும் கழறப்புக்கனள்.

இன்னவாறிச் சூர்ப்பணகை சொல்லிவருகையில்
இராகவன் திருமுகத்தில் மந்தநகையரும்ப அருகு
நின்ற இளையவனை சிடுசிடுத்தான் போலும். இதனைக்
கண்டு இனைந்தவவள்,

> சிவனுமலர்த் திசைமுகனுந் திருமாலுந் தெறுகுலிசத்
> தவனுமடுத் தொன்றாகி நின்றன்ன வுருவோனே
> புவனமனைத் தையுமொருதன் பூங்கணையா லுயிர்
> [வாங்கு
> மவனுமுனக் கிளையானோ விவனைபோ லருளிலனால்

[சிவனும், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரம்மனும்,
திருமாலும், கொல்கின்ற வச்சிராயுதத்தையுடைய இந்திர
னும், சேர்ந்து ஒன்றாகி நின்றாற்போன்ற வடிவமுடைய
வனே, எவ்வுலகத்திலுள்ள உயிர்களையும் தன்னொரு மலர்ப்
பாணத்தால் உயிர்வாங்கும் அம் மன்மதனும் உனக்குத் தம்
பியேயோ! இந்த உன் தம்பியேபோல் கருணை என்பது
கண்டறியாதவனா யிருக்கின்றான்]

என இடித்துரைத்துப் பின்னும் தன்னிலையின் தகு
தியையே தெரிவிப்பாளாகி,

> பொன்னுருவப் பொருகழலீர் புழைகாண
> மூக்கரிவான் பொருள்வே றுண்டோ
> இன்னுருவ மிதுகொண்டிங் கிருந்தொழியு
> நம்மருங்கே யேகா ளப்பால்
> பின்னிவளை யயலொருவர் பாராரென்
> றேயரிந்தீர் பிழைசெய் தீரோ
> அன்னதனை யறிந்தன்றோ வன்பிரட்டி
> பூண்டதுநா னறிவி லேனோ

[பொன்மயமான அழகிய போர்க்கழலை அணிந்தவர்களே,
அழகிய உருவத்தோடு இவள் இருந்தால் ஒருகால் இவள்நம்
மைவிட்டுப் போய்விடலாம். (ஆதலின் அவ்வழகைச் சிதைத்
துவிட்டால்) அப்பால் போகமாட்டாள், வேறெவரும் இவளை
முகமெடுத்தும் பார்க்கமாட்டார் என்பதன்றி, என்மூக்கை
அரிவதற்கு வேறு கருத்து உங்களுக்கு இருக்கக்கூடுமோ;
ஆகையால் நீங்கள் பிழைசெய்தவர்களாகமாட்டீர். இது
பற்றியேநான் உங்களிடம் முன்னினும் இருமடங்கு அதிக
மாய் அன்புவைக்கத்தலைப்பட்டேன். இல்லையேல் இவ்வாறு
செய்வேனோ! அவ்வளவு அறிவில்லாதவளோ நான்]

என்னத் தன்னறிவுந் தன்னை மூக்கரிந்தார்தம் மறிவும் பாராட்டிப் பார்த்தனள். இராமனோ இவளழகையேனும் அறிவையேனும்ஆற்றல்துணையையேனும் மதித்த குறியொன்றும் முகத்திற் காட்டிலன். ஆதலின், "உக்கிரம் மிகுந்த வேலாயுதமுடைய அரக்கர் வெகுண்டு, நீர் எனக்குச் செய்த இவ்வொரு பழியின்காரணமாக உலகடங்கலும் அழித்திடுவார். ஆதலின் அறத்தை உணர்ந்து இப்பழி நேராவண்ணமேனும் என்னுடனே இனிது கூடி வாழ்ந்திருங்கள்" எனத் தருமம்பேசத் தலைப்பட்டனள். இப்பொழுதே இராமனுக்குக் கோபம்மூண்டது. அரக்கர்தம் பேராற்றலேயன்றித் தனக்குரிய தருமமும் பேசுவதோ இப்பகுவா யரக்கியென மிகமுனிந்து,

> நாடறியாத் துயரிழைத்த நவையரக்கி
> நின்னன்னை தன்னை நல்குந்
> தாடகையை யுயிர்கவர்ந்த சரமிருந்த
> தன்றியுநான் றவமேற் கொண்ட
> தோடகைய துறுமலர்த்தா ரிகலரக்கர்
> குலந்தொலைப்பான் றோன்றி நின்றேன்
> போடகலப் புல்லொழுக்கை வல்லரக்கி
> யென்றிறைவன் புகலும் பின்னும்

[இதுவரையில் உலகம் கண்டறியாத கொடிய துன்பத்தைச் செய்த குற்றமுள்ள இராக்ஷஸியாகிய, உன் அன்னையைப் பெற்றவளாகிய தாடகையை உயிர்கவர்ந்த அம்பு என்னிடத்தில் இருக்கின்றது; அதுவும் அன்றி, தவம்செய்து வரங்கள் பெற்ற தோள்வலிமை யுள்ளவர்களும் நெருங்கிய பூமாலை பூண்டவர்களும்பராக்கிரமம் உடையவர்களுமாகிய அரக்கர் குலத்தை அழித்தொழிக்கும்பொருட்டுப் பிறந்திருக்கின்றேன். ஆகையால்,கொடிய அரக்கியே, உன் அற்பநடத்தையைத் தூரப்போடு—என்று இராமன் சொல்லிப் பின்னும்]

தயரதன்மக்களாகிய தாம் தாய்சொற்றாங்கிக் கான்புகுந்து, மாதவரும் வேதியரும் வேண்டியவாறு அரக்கர் குலம் அத்தனையும் தொலைத்து அயோத்திமாநகர் மீளக்கருதியிருப்பதை மனங்கொளச் சொல்லி,"அரக்கருக்கெதிர் நிற்கவாற்றாமல் தேவரும் தோற்றுமீண்டனர், மற்றிம் மானுடர் இருவர் என்செய்யவல்லார் என்றிகழாது, நீவல்லவளாயின், வலிமைமிக்கவரென்று நீ கூறிய அரக்கர் இயக்கர் யாவரையும் கொணர்வாயாயின் உன்னெதிரேயே அவர்களைக்கொன்று காட்டுகின்றோம்" எனச்சாற்றினான்.தாடகைகைக் கொன்ற சரத்தைப்பற்றி இராமன் தற்புகழ்ச்சிபேசிக்கொள்ளமாட்டான் நிச்சயம். ஆடவர் நகையுற ஆண்மைமாசுற வத்தாடகையெனுந் தையலாள் விழத் தான் பகழியெய்த பழியினைக் கூனியினும்இராகவனே பெரிதுணர்வான். வேறு வழியில்லையாயின் பெண்கொலைபுரிவதெனனும் அத்தூரமும் தான் இழியவல்லவன் என்பதை இச்சூர்ப்பணகைக்கிங் கறிவுணர்த்தி யவளை அகற்றவே இது பகர்ந்தனனல்லாது தன் வெற்றியை விளம்பிய வாசகமன்றிது.

சூர்ப்பணகையைத் தூரத்துதற்குத்தான்பெண்கொலைப் பாதகமும் பாரான் என்று இராமன் சாற்றியதற்கெதிர், இராமனோடு இருக்கவெனில் தானும் பின்னிடாத பழியில்லை என்பாள்போல்,

> காம்பறியுந் தோளாளைக் கைவிடு
> ரெனினும்யான் மிகையோ கள்வ
> ராம்பொறியி லடலரக்க ரவரோடே
> செருச்செய்வா னமைந்தீ ராயிற்
> றும்பொறியிற் பலமாயந் தரும்பொறிக
> ளறிந்தவற்றைத் தடுப்பெ னன்றே
> பாம்பறியும் பாம்பின்கா லெனமொழியும்
> பழமொழியும் பார்க்கி லீரோ

[மூங்கிலை ஒத்த தோள்களையுடைய இவளை, விட்டுவிடமாட்டீராயினும் என்னையும் ஏற்றுக்கொண்டால் அது உங்களுக்கு அதிகமாமோ! வஞ்சகர்களாகிய நல்லெழுத்தில்லாத வலியுடைய அந்த அரக்கர்களுடனே, நீங்கள் சொல்லிய வண்ணம் போர்செய்ய நேர்ந்தீர்களானால், மாயங்கள் பல செய்யும் அவர்கள் யந்திரங்களை என் அறிவினால் தெரிந்துகொண்டு தடுப்பதற்கு உதவமாட்டேனோ! பாம்பின் கால்களைப் பாம்பே அறியும், என்னும் பழமொழியைக் கருதமாட்டீர்களோ]

எனத் தன் முன்னவன் அவ்விராவணனொடு குலமடங்கலும் அழித்தொழிக்க உதவிசெய்ய உடன்படுகின்றனள். இராகவன் சேர்க்கைக் கவாவிய சூர்ப்பணகை இன்று இது சொன்னாள், பிற்றைநாள் இவள் தமயன் வீடணன் இதனையே செய்தான். இவ்விருவோரில் எவர்சிறியர் எவர் பெரியர் என்னுமதைத்தேர்வதன்முன், சூர்ப்பணகை மேலுஞ் சொல்வாள்,

> உளங்கோட லுனையிழைத்தா ளுளளொருத்தி
> யென்னுதியே னிருத ரோடுங்
> களங்கோடற் குரியசெருக் கண்ணியக்கா
> லொருமூவேங் கலந்த காலைக்
> குளங்கோடு மென்றிதுவு முறுகோளே
> யென்றுணருங் குறிக்கோ ளில்லா
> இளங்கோவோ டெனையிருத்தி னிருகோளுஞ்
> சிறைவைத்தாற் கிளையே னென்றாள்

[உன்மனதைமுற்றிலும் தனக்கே கவர்ந்துகொண்டவள் ஒருத்தியிருக்கின்றாளாதலின், என்னை உவந்து நீ ஏற்றுக்கொள்ள இயலாதெனக் கருதுகின்றாயாயின், அரக்கரோடு போர்க்களம் வெல்லும்படி நீ சண்டைசெய்யக் கருதியக்கால், நாம் மூவரும் சேர்ந்தபொழுது, இரத்தக்களத்தில் வெற்றிகொள்வோம் என்னுமிக் கொள்கையை அறிவதற்குரிய ஆலோசனையில்லாத இந்த உன் தம்பியுடனேயேனும் என்னை நீ வாழவைத்தால், சூர்யசந்திரர்களையும் சிறைவைத்த இராவணனுக்கும் இளைக்கமாட்டேன்—என்றாள்]

தாமுறு மோகத்தன்மை தாங்களே உரைப்பதென்பது நிருதர்குல மகளிர்க்கு நீர்மைதானே. தன் மாற்றவளை இராமன்றன் அகத்தினின்று பறித்தகற்றலாகாதென்பதை நன்குணர்ந்தபின், அறிவின்றித் தன்னையங்கபங்கஞ்செய்த சிறுவனாயினும் இவ்விளங்கோவிற்கேனும் தன்னை முறைசெய்துகொள்வதற் கவாவிநிற்கும் இப்பேதைச் சழக்கி,

> பெருங்குலா வுறுநகர்க்கே யேகுநாள்
> வேண்டுமுருப் பிடிப்பே னன்றேல்
> அருங்கலா முற்றிருந்தா னென்னினுமீங்
> கிளையவன்றா னரிந்த நாசி
> ஒருங்கிலா விவளோடு முறைவேனோ
> வென்பானே லிறைவ வொன்று
> மருங்கிலா தவளோடு மன்றோநீ
> நெடுங்காலம் வாழ்ந்த தென்பாய்

[மிகவும் கொண்டாடப் பெறுகின்ற நகரத்திற்கு மீண்டு செல்லுங் காலத்தில், வேண்டிய வுருவத்தை, நான்எடுத்துக் கொள்வேன்; அதுவுமன்றி, உன்தம்பி இப்போது கோபம் தணிந்து உன் சொற்கிணங்கி என்னைக் கொண்டானானாலும் அறுபட்ட மூக்குமுழுவதும் இல்லாதவளோடு நான் கூடிவாழ்வேனோவென்று குறைகூறுவானாயின், தலைவனே, ஒரு விடயம்—நீ இடுப்பொன்றும் இல்லாதவளுடன் நெடுங்காலம் கூடிவாழ்ந்துவருகின்றாயென்பதைச் சொல்]



எனச்சாற்றி, இவ்வண்ணஞ் சானகியைப் புகழ்வது பற்றியேனும் தன்பால் தயைவைப்பரோ என்றெதிர் பார்த்தனள். வான்மீகி இராமாயணத்தில் இராமனும் இலக்குவனும் மாற்றிமாற்றி ஒருவர்மீதொருவர் சூர்ப்பணகையை ஏவி விளையாடியதற்கு மாறாக இங்கு இவ்வரக்கி தானே மாறிச் சார்ந்தனள்.மூக்கிலா நங்கைக்கு நாக்கதிகமாவது கண்டு இனி இவளைக் கொல்வதல்லால் தொலைப்பதற்கு வேறோர் வழியில்லைபோலும் என வீரரிருவரும் தம்முள் பேசிக்கொண்ட தன்மையை யுணர்ந்து வீங்குஞ் சினத்தோடு நிங்குபவளாய்,

> ஏற்றநெடுங் கொடிமூக்கு மிருகாது
> முலையிரண்டு மிழந்து வாழ
> ஆற்றுவனே வஞ்சனையா லுமையுள்ள
> பரிசறிவா னமைந்த தன்றோ
> காற்றினினுங் கனலினுங் கடியானைக்
> கொடியானைக் கரனை யுங்கள்
> கூற்றுவனை யிப்பொழுதே கொணர்கின்றே
> னென்றுசலங் கொண்டு போனாள்.

[அமைந்த நீண்ட கொடிபோன்ற மூக்கையும், இரண்டு காதுகளையும் இரண்டு முலைகளையும் இழந்தபின்பும் உங்களுடன் சேர்ந்து வாழச் சம்மதிப்பேனோ? உங்களை உள்ளபடி அறிவதற்கு நான் செய்த வஞ்சனையன்றோ இது! காற்றைவிட வேகமுள்ளவனும், நெருப்பைவிடக் கொடியவனும், உங்களுக்கு எமனும் ஆகிய கரனை இப்பொழுதே அழைத்துக்கொண்டு வருகின்றேன்—என்று வைரங்கொண்டு சூர்ப்பணகை போனாள்]

மெல்லியல்வல்லியாய் வந்தவோர்வனிதை கொல்லியல் கூற்றினைக் கொணர்வதற்கு மீண்டவா றிவ்வாறு. இராமனுமக் கூற்றுவனைக் காணலாமென்னு மாசையாற் காத்திருந்தான்.

—§—

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[477-வது பக்கத் தொடர்ச்சி]

(iii) இந்திரியம்:--உடம்போடு சையுக்தமாய ஞானகரணமான அதீந்திரியம், இந்திரியமாகும். இந்திரியம் என்றால் உணர்கருவி. அதீந்திரியம் என்றால் இந்திரியத்திற்கு விஷயமாகாமை, என்பது பொருள்.

மற்றும் சத்தமல்லாத உற்பூத விசேடகுணங்கட்கு ஆசிரயமாகாமல், ஞானத்திற்குக் காரணமான மனசையோகத்திற்கு ஆசிரயமாயுள்ளது இந்திரிய மென்பதும் பொருந்தும்.

இந்திரியங்கள் ஆறு. அவையாவன i கிராணம் ii இரசநம் iii சட்சு iv துவக்கு v சுரோத்திரம் vi மனம்.

இந்திரியங்கள் ஐந்து என்பது மரபாயினும், மனதுடன் ஆறு இந்திரியங்களெனவும் அதனால் மனிதனை ஆறறி உயிரெனவும் கூறுவது காண்க.

> "ஓரறி வதுவே உற்றறி வதுவே
> ஈரறி வதுவே யதனொடு நாவே
> மூவறி வதுவே யவற்றொடு மூக்கே
> நாலறி வதுவே யவற்றொடு கண்ணே
> ஐயறி வதுவே யவற்றொடு செவியே
> ஆறறி வதுவே யவற்றொடு மனனே
> நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தானு முணர்க. இவ்வாறு வகுப்பதில் ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்களில் அடங்கும். முதலைந்து இந்திரியங்களும் மனதுடன் சம்பந்தப்படுங்காலை, அவற்றின் சம்பந்த நிலையே ஞானேந்திரிய மென்னலாம். இவ்வைந்து இந்திரியங்களும் பஞ்சபூதங்களை அவாவிநிற்கும். இந்திரிய வசமாதலைப் பஞ்சபூதவலை யென்பர் அப்பர்:—

> பஞ்ச பூத வலையிற் படுவதற்
> கஞ்சி நானு மாமாத்து ரழகனை
> நெஞ்சி னுல்நினைந் தேன்நினை வெய்தலும்
> வஞ்ச வாறுகள் வற்றின காண்மினே
> திருஆமாத்தூர் - திருக்குறுந்தொகை 3.

I கிராணம் (The Sense of Smell)

மேற்கூறியவற்றுள் கந்தத்தோற்ற சாதனஇந்திரியம் கிராணம். இது மூக்கின் நுனியிலிருப்பது. இது பிரிதிவியின் காரியம் அல்லது பிருதிவிமயம். இது குடம்போல நாற்றமுடையது.

> மூக்கி னால்முரன் றோதிய குண்டிகை
> தூக்கி னார்குலந் தூரறுத் தேதனக்
> காக்கி னானணி யாறை வடதளி
> நோக்கி னார்க்கில்லை யாலரு நோய்களே
> திருப்பழையாறைவடதளி - திருக்குறுந்தொகை 2.

கந்தப்பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரியம் கிராணேந்திரியம்.

> கந்த வார்குழல் கட்டிலள் காரிகை
> அந்தி மால்விடை யோடுமன் பாய்மிக
> வந்தி டாய்மறு கற்பெருமா னென்று
> சிந்தை செய்து திகைத்திடுங் காண்மினே
> திருமறுகல் - திருக்குறுந்தொகை 9.

இது சட்சும் துவக்கும்போல் திரவியத்தைக் கவர்வதன்று. காற்றால் நாற்றம் பரவப்பட்டு இவ்விந்திரியத்தைச் சில அணுக்கள் தாக்கியபின்னரே, கந்தம் உணரப்படும். இக்கருத்தால் அப்பர் அணுக்களுக்குப்பிராணாதாரமான பரமனை, 'மூக்கே - நீ முரலாய் - முதுகாடுறைமுக்கணனை' என்றார். இவர் திருமுடியிலுள்ள கொன்றைத்தொடையின் நாற்றமும் அவ்வாறே அன்பரைத் தாக்கும்:—

> கந்தமலர்க் கொன்றையணி சடையான் றன்னைக்
> கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
> சந்தமலர்த் தெரிவையொரு பாகத் தானைச்
> சராசரநற் றாயானை நாயேன் முன்னைப்
> பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
> பன்னியநூல் தமிழ்மாலை பாடு வித்தென்
> சிந்தைமயக் கறுத்ததிரு வருளி னானைச்
> செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே
> திருச்செங்காட்டங்குடி-திருத்தாண்டகம் 4.

## I. இரசநம் (The Sense of Taste)

இரசத் தோற்றசாதன இந்திரியம் இரசநம். நாவின் நுனிப்பாகத்திலிருப்பது. வாய்நீர் இரசத்தைப் பிரகாசிப்பித்தல்போல், இரசேந்திரியமும் இரசத்தைப் பிரகாசஞ் செய்கின்றதென்பதாம். ஒரு கனியின் சிறப்பு உண்டாலன்றி விளங்காதாதலால், அதை யுண்டபிறகு உண்டாகும் ஞானம் மிகவும் வியாபகமானதென்பர். கீழ்வரும் அப்பர் பாசுரத்தில், கனியுண்ணலை உருவகப்படுத்தி ஈஸ்வரஞானத்தைக் காட்டுவது காண்க:--

மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீசனெ னுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே.

தனிக்குறுந்தொகை 7.

இரசநத்தா லறியப்படுவது அறுசுவை. அவற்றுள் தித்திப்பு மிகவும் இனியது:—

எத்திக்கு மாய்நின்ற இறைவன் றன்னை
ஏகம்ப மேயானை யில்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்குஞ் சமணர் பொய்யிற்
புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டைவினைப் பயமான வெல்லாம் போக்கித்
தித்தித்தேன் மனத்துள்ளே யூறுந் தேனைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டே னானே.

திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம் 7.

புளிப்பு இன்னாதது - இச்சுவை துன்பம்பயக்கும்- புளியைநீக்கத் தேகவினை குன்றும் இது அமுதத்தைக்கெடுப்பது. புண்ணிற்பெய்யும் புளியின் இலக்கணம் ஆண்டாள் திருமொழியில் காணலாம்.

கண்ண னென்னுங் கருந்தெய்வம்
காட்சிப் பழகிக் கிடப்பேனைப்
புண்ணில் புளிப்பெய் தாற்போலப்
புறநின் றழகு பேசாதே
பெண்ணின் வருத்த மறியாத
பெருமா னரையில் பீதக
வண்ண வாடை கொண்டென்னை
வாட்டம் தணிய வீசிரே.

13-வது திருமொழி 1.

அப்பரும் புளியம் வளாரை மோதுதற்குப் பயன்படுமென்று காட்டுகின்றார்.

ஓதுவித் தாய்முன் னறவுரை காட்டி யமணரோடே
காதுவித்தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித்தாய்நின் பணிபிழைக்கிற்புளியம் வளாரால்
மோதுவிப் பாயுகப் பாய்முனி வாய்கச்சி யேகம்பனே

திருவேகம்பகம் - திருவிருத்தம் 1.

துவர்ப்பு பந்தமுடையது. இது சுவையில் அசுத்தமானது. தனிச்சுவையாய் இன்னாதது. துவர்ப்பைச் சம்பந்தர், ஆடையிலுள்ள பந்தமான மாசென இழித்துரைப்பதுகண் டனுமானிக்கலாம்.

துவருகின்ற வாடையுடல் போர்த்துழன்ற
வவர்தாமு மல்ல சமணும்
கவருறு சிந்தையாள ருரைநீத் துகந்த
பெருமான் பிறங்கு சடையன்
தவமலி பத்தர்சித்தர் மறையாளர் பேண
முறைமாதர் பாடி மருவும்
நவமணிதுன் றுகோயி லொளிபொன்செய் மாட
நறையூரி னம்ப னவனே. சம்பந்தர்.

உப்பு-இது வன்மை கொடுப்பது. இனிமையை இதுபண்டங்களில் அதிகரிக்கச் செய்வதுவாம். உப்பின் காரணமாய்க் கடலையும் "உரக்கடல்" என்று தமிழ்மறை கூறும்:—

உரக்கடல் விடத்தினை மிடற்றிலுற வைத்தன்
றரக்கனை யடர்த்தருளு மப்பனிட மென்பர்
குரக்கினம் விரைப்பொழிலின் மீதுகனி யுண்டு
பரக்குறு புனற்செய்விளை யாடுபழு வூரே.

சம்பந்தர்.

கசப்பு:—இது கோபத்தையும்* வெறுப்பையும் உண்டாக்கும் சுவை. இதன் குணம் பித்தம்:—

வேம்பினைப் பேசி விடக்கினை
யோம்பி வினைபெருக்கித்
தூம்பினைத் தூர்த்தங்கோர்
சுற்றந் துணையென் றிருத்திர்தொண்டர்
ஆம்பலம் பூம்பொய்கை
யாரூ ரமர்ந்தா னடிநிழற்கீழ்ச்
சாம்பலைப் பூசிச் சலமின்றித்
தொண்டுபட் டுய்ம்மின்களே.

திருவாரூர்-திருவிருத்தம்-1.

இதைப் பிச்சின் தன்மை யென்னலாகும்:—

பிச்சிலேன் பிறவி தன்னைப்
பேழையேன் பிணக்க மென்னுந்
துச்சுளே யழுந்தி வீழ்ந்து
துயரமே யிடும்பை தன்னுள்
அச்சனே யாதி மூர்த்திக்
கன்பனாய் வாழ மாட்டாக்
கொச்சையேன் செய்வ தென்னே
கோவல்வீ ரட்டனீரே.

திருக்கோவலூர் வீரட்டானம்-திருநேரிசைஃ.

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மறவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

ஸ்ரீ கைலாயம் போற்றித் திருத்தாண்டகம் 2.

கார்ப்பு:—இது காரம் என்னும் சுவை - மிளகு - இஞ்சி திப்பிலி முதலியன கொடுப்பதாம்.

## III. சட்சு (The Sense of Sight)

ரூபத்தோற்ற சாதன இந்திரியம் சட்சு. கண்ணுறை கருமணியின் நுனியிலிருப்பது. அதுவும் தேயுமயம். "கண்ணவன் காண், கண்ணொளி சேர் காட்சியான் காண்" என்னும் அப்பர் பாசுரம் நோக்குக.

கண்ணானை மணியானைக் கருத்தானை அருத்தானை
எண்ணானை யெழுத்தானை யெழுத்தினுக்கோ ரியல்பா [னை

---

* திக்கிற்றே வற்றற்றே திகழ்ந்திலங்கு மண்டலச்
சிறூர் வீறூர் போரார்தா ரகனுட லவனெதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்தீப்
போலே பூநீர் தீகான்மீப் புணர்தரு முயிர்கடிறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்த மங்கை செங்கரத்
தோடே யாமே மாலோகத் துயர்களை பவனிடங்
கைக்கப்பேர் யுக்கத்தே கனன்று மிண்டு தண்டனை
காடே யோடா வூரேசேர் கழுமல வளநகரே

சம்பந்தர்.



விண்ணானை விண்ணிடையே புரமெரித்த வேதியனை
அண்ணானை வையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே.

திருவையாறு - பண் - பழந்தக்கராகம் 7.

ரூபம் என்பது செம்மை முதலிய நிறத்தின் நிலையேயாம். உருவப் பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணம் சட்சு விந்திரியமாம். விளக்கு உருவத்தைப் பிரகாசம் செய்வதுபோல் சட்சு இந்திரியமும் உருவத்தைப் பிரகாசஞ் செய்கின்றது. "கண்ணிநொளியேயல்லால் கதிரவ னொளியுமில்லை" என்னும் நீதிவாக்கியத்தையும் கவனிக்க. பொருள்கள் இன்னவையெனத் தெளிவு படுத்துவது ஒளி. அது உள்ளத்தில் பதிந்தாலன்றித் தெளிவின்மை மயமாம்:—

குளிர்பு னற்குரங் காடு துறையனைத்
தளிர்நி றத்தையல் பங்கனைத் தண்மதி
ஒளிய னைந்நினைந் தேனுக்கென் னுள்ளமும்
தேளிவி னைத்தேளி யத்தேளிந் திட்டதே

திருத் தென்குரங்காடுதுறை - திருக்குறுந்தொகை 3.

நெய்யவர் விழுமி யாரு நூலினுள் நெறியைக் காட்டும்
மெய்யவர் பொய்யுமில்லா ருடலெனு மிடிஞ்சில் தன் [னில்
நெய்யமர் திரியுமாகி நெஞ்சத்துள் விளக்கு மாகிச்
செய்யவர் கரியகண்டர் திருச்செம்பொன் பள்ளியாரே

திருச்செம்பொன்பள்ளி - திருநேரிசை - 2.

## IV. துவக்கு (The Sense of touch)

பரிசத்தோற்ற சாதன இந்திரியம் துவக்கு. இது உடம்பெங்கும் வியாபித்திருக்கும். இது வாயுமயம் என்பர். பரிசத்தைத் தமிழில் ஊறு என்பர். இவ்விந்திரியம் பரிசப்பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணமாகும். வெப்பத்தாலுண்டான சரீர சம்பந்தமான வியர்வை நீக்கிக் குளிர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு ஏதுவான விசிறிக்காற்றுனது பரிசத்தோற்றத்திற்கேதுவாயிருத்தல்போல, துவக்கிந்திரியமும் பரிசத் தோற்றத்திற்கு ஏதுவாயிருக்கின்றது.

தீண்டற் கரிய திருவடி யொன்றினால்
மீண்டற் கும்மிதித் தாரரக் கன்றனை
வேண்டிக் கொண்டேன் திருவாய்மூர் விளக்கினைத்
தூண்டிக் கொள்வனு னென்றலுந் தோன்றுமே

திருவாய்மூர் - திருக்குறுந்தொகை 10.

என்னுஞ் செய்யுளில் தீண்டலுக்கும் மிதித்தலுக்குமுள்ள பேதங் காட்டப்படுகின்றது. மற்றும்,

கடலிடை மலைகள் தம்மா
லடைத்துமால் கழும முற்றித்
திடலிடைச் செய்த கோயில்
திருவிரா மேச்சு ரத்தைத்
தோடலிடை வைத்து நாவிற்
சுழல்கின்றேன் தூய்மை யின்றி
உடலிடை நின்றும் பேரா
வைவராட் டுண்டு நானே

திருவிராமேச்சுரம் - திருநேரிசை 3.

என்பதும் காண்க. நாவிலும் துவக்குப் பரவியுள்ளது, என்பதறிக. பரிசம் திரவியக்கவர்ச்சியில் ஒருவகை:--

ஒட்டி நின்ற உடலுறு நோய்வினை
கட்டி நின்ற கழிந்தவை போயறத்
தோட்டு நின்றுமச் சோற்றுத் துறையற்கே
பட்டி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே.

திருச்சோற்றுத்துறை - திருக்குறுந்தொகை 3.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
ச்யாவனப்ராச
ஜீவஸுதா
பாதாமி லேகியம்
தந்வந்தரி லேகியம்

தைலங்கள்:
அமிர்தாமலக
பிருங்காமலக
ஸுகுமார
ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)
I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. மெடிகேடட்-டப்பி
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

தினகர வெண்பா
S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L., அவர்கள் பதிப்பித்தது.
கலாநிலயம் வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை அணா 6.

# 1932-வது வருடத்திய வால்யூம் 5. அட்டவணை

[ஜனவரி—முதல் ஜூன் வரையில்]

## தலையங்கம்.


| இதழ் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | கலாநிலயம் கைக்கொண்ட கருமம் | | 1 |
| 2 | இறுமாந்திருப்பன் கொலோ | 1 | 21 |
| 3 | ,, | 2 | 41 |
| 4 | ,, | 3 | 61 |
| 5 | நெஞ்சத்து நல்லன் யான் | 1 | 81 |
| 6 | ,, | 2 | 101 |
| 7 | ,, | 3 | 121 |
| 8 | இரக்கத்திற்கிடம் | | 141 |
| 9 | விதியோ வித்தகமோ | 1 | 161 |
| 10 to 25 | வித்தகமோ விதிவசமோ | 2 to 17 | 181, 201, 221, 241, 261, 281, 301, 321, 341, 361, 381, 401, 421, 441, 461, 481. |


## கம்பராமாயணம்—ஆரணியகாண்டம்.

### 1. விராதன் வதைப்படலம்.


1 கற்பினுற் காதல்கொண்ட பெருமையை முனிவர் கண்டார் ... 14
2 கலிகால மிதுவென்னப் புலமையாற் காட்டினர் ... 36
3 உறங்காதுறங்கியே வாராது வரவல்லோன் 52


### 2. சரபங்கர் பிறப்பு நீங்கு படலம்.


4 பொதுமையும் புதுமையாய்ப் பொலிந்து தோன்றுமே ... 77
5 துறவினிற் பெரியதோ துறக்கத்தின்பமே 90
6 இருமுறை யிந்திர னிரியல் போயினன்... 91
7 மூடனு முனைவனுந் தேடரு கடவுள் ... 136


### 3. அகத்தியப் படலம்.


8 கம்பராற் பெருமை யெய்தத் தவஞ்செய்த தவந்தான் காண்மின் ... 521
9 பேரெண் ணதுவெனப் பேசற் கூடுமோ 176


### 4. ஜடாயுகாண் படலம்.


10 பழிப்பில தேலொரு பசையு மில்லையே ... 195
11 பெருமையி னருமையை யெருவையுங் கருதும் ... 213


### 5. சூர்ப்பணகைப் படலம்.


12 நதியின் தூய்மையோ நாநயம்வாய்ப்பது... 232
13 காரணத்துண்மையே காரிகை காரியம் ... 254
14 அரக்கியோ வறிவது தவத்தின் பெருமையே276
17 அழகினுக் குடையவ ளரக்கியே யலள் ... 335
18 உருவமு முரைகளுங் கைக்குங் காதலாள் 355
19 நஞ்சமகள் தந்ததென வஞ்சனைசெய் செய்யுள் ... 371
20 முனிவரின் விலகிய கலைஞரி னருமை ... 396
21 ஒருநிலை யொருமொழி யுரைப்ப துண்மையே ... 414
22 தன்னையே பிறரிற்கண்டு வெறுப்பவர் தன்மை யீதே ... 423
23 பாலுறு பிரையுங் கனலிடு கடுவும் ... 455
24 உறங்காதா ருறங்குவிக்க வந்ததொரு பச்சைமலை ... 474
25 ஒன்றெூன் றில்லா வோரகத்தி வாழ்க்கை நன்றே ... 492


## அப்பர்.

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்-தருக்கம்


| இதழ் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | தருக்கக்கலையின் அவசியம், தருக்கமும் மனோ சாஸ்திரமும் | | 17 |
| 2 | தருக்கமு மத னெல்லையும்—பதார்த்தமும் குணமும் | | 26 |
| 3 | ஜடபதார்த்த வகை | | 51 |
| 4 | பூதபரிணமம் | | 75 |
| 5 | தருக்கக்கலையின் மூகவகை அடிப்படை | | 88 |
| 6 | பிரமாணம்-பிரமேயம் | | 103 |
| 7 | பிரமாணத்தின் வகுப்புக்கள்-பிரத்தியக்ஷம் | | 135 |
| 8 | ,, | ,, | 150 |
| 9 | ,, | அநுமானம் | 171 |
| 10 | ,, | (பஞ்சரூபம்) | 185 |
| 11 | ,, | ,, | 203 |
| 12 | ,, | ,, | 235 |
| 13 | ,, | ,, | 252 |
| 14 | ,, | உவமானம் | 273 |
| 15 | ,, | சப்தப்பிரமாணம் | 294 |
| 16 | ,, | ,, | 315 |
| 17 | ,, | ,, | 326 |
| 18 | ,, | ,, | 347 |
| 19 | ,, | ,, | 375 |
| 20 | ,, | அருத்தாபத்தி | 394 |
| 22 | ,, | அநுபலத்தி | 433 |
| 23 | ,, | ,, | 447 |
| 24 | பிரமேயம் | | 476 |
| 25 | ,, | இந்திரியம் | 495 |


## ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத் தமிழ்.


14 காப்புப் பருவம் ... ... 269
15 செங்கீரைப் பருவம் ... ... 291
16 தால் பருவம் ... ... 310
17 சப்பாணிப் பருவம் ... ... 324
19 முத்தப் பருவம் ... ... 373
20 வாரானைப் பருவம் ... .... 389
21 அம்புலிப் பருவம் ... ... 405
23 சிற்றிற் பருவம் ... ... 446
24 சிறுபறைப் பருவம் ... ... 467
25 சிறுதேர்ப் பருவம் ... ... 490


## நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | 2-ம் பத்து | 7-ம் தசகம். | கேசவன் | 1-5 | 271 |
| 15 | ,, | ,, | ,, | 6-13 | 285 |
| 16 | ,, | 8 ,, | அணைவது | 1-5 | 314 |
| 17 | ,, | ,, | ,, | 6-11 | 328 |
| 18 | ,, | 9 ,, | எம்மாவீடு | 1-5 | 344 |
| 19 | ,, | ,, | ,, | 6-11 | 367 |
| 20 | ,, | 10 ,, | கிளரொளி | 1-6 | 385 |
| 21 | ,, | ,, | ,, | 7-11 | 413 |
| 22 | 3-ம்பத்து | 1-ம் தசகம் | முடிச்சோதி | 1-4 | 430 |
| 23 | ,, | ,, | ,, | 5-11 | 449 |
| 24 | ,, | 2-ம் | முந்நீர் ஞாலம் | 1-6 | 461 |
| 25 | ,, | ,, | ,, | 7-11 | 488 |




## ஜூலியஸ் ஸீஸர்.


| இதழ் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் அங்கம் 1 | களம் 1 | 11 |
| 2. 3 & 4. | ,, | 2 | 33 49. 69 |
| 5. & 6. | ,, | 3 | 93. 111. |
| 7. 8. 9. & 10 | 2. ,, | 1 | 132. 148. 174. 192. |
| 11 & 12. | ,, | 2 | 208. 226. |
| 13 | ,, | 3 | 249 |
| 14. 17. 18. 20. & 21. | 3. ,, | 1 | 264. 333. 349. 392. 411. |
| 22. 23. 24. & 25. | ,, | 2 | 435. 452. 471 486. |
| 25 | ,, | 3 | 486. |


## குன்றுடையானும் மக்களும்.

முதற்புத்தகம்—குன்றுடையான் வரலாறு.


1 குன்றுடையான் தாய்தந்தைகளை யிழந்தது 6
2 & 3. பங்காளிகளிடத்தில் அவதிப்பட்டது 28,47
4. ஐயன்மார் ஊரை அடைந்தது ... 66
5 & 6 மாமன்மார் ஊரை அடைந்தது... 86,106
7 பிறந்த ஊருக்குப் போனது .... 127
8 & 9 வேளாண்மை செய்து சீமானனது 145 163
10 & 11. மனைவி மகப்பேறின்றி வருந்தியது ....183. 205.
12 & 13 செல்லாண்டியம்மனுக்கு மஞ்சன் தேரோட்டினது. ...228, 247.
14 தவம் செய்து வரம் பெற்றது. ... 266


இரண்டாம் புத்தகம் - அண்ணன்மார் வரலாறு


15. 16. & 17. பிறப்பு வளர்ப்பு.... 283. 303. 323.
18. 19. & 20. அண்ணன்மார் கலியாணம் .... 343. 366. 383.
21. 22. 23. 24 & 25. கிளிப்போர் 407. 428. 445. 469. 483.


## தினகர வெண்பா.


1 6 7 8 9 10 11 96. 114. 131. 155. 167. 197. 212.


## பிற விஷயங்கள்.


1 & 2 கந்தபுராணமும் சங்க நூல்களும்... 9. 29.
2&9 மானத சாத்திரம் ... 31. 165.
3 சூளாமணி (உரை). தூதுவிடு சருக்கம் 50-55 ... 57
8 மல்லிகை மலரே—ஒரு சிறு பாட்டு ...157
10 12 13 15 வில்லிபாரத விளக்கம் (சூது போர்ச்சருக்கம்) 189, 230, 256, 292
13 இளமையும் முதுமையும் ... 257
15 பெற்றோரும் மக்களும் ... 295
17 மணமும் மணமின்மையும் ... 227
19 நாட்டு அன்பு (ஒரு சிறு நாடகம்) ... 369
20 பழக்கமும் கல்வியும் ... 390
23 அரவரசி கதை ... 451


## மொழி பெயர்ப்பு.


4 5 6 7 பெண்பாலார்—Schopenhaur... 73 92. 117 129
16 பொருளாசை—Samuel Johnson ... 305
20 பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா-பொதுவுரை 391
21 ,, ஜீவிய சரிதமும் தத்துவப் போக்கும் 408
22 ,, சித்தாந்தங்கள்-கடவுள், பிரபஞ்சம் 431
23 ,, ,, ஞானம் அறம் ... 448
24 ,, ,, ,, ... 470


## மதிப்புரை.


| இதழ் | | பக்கம் |
|---|---|---|
| 6 | பாகவத வினு விடை | 119 |
| 11 | நூற்பொருட் குறிப்பு | 207 |
| 12 | இராமாயண வினு விடை; புதுமை | 234 |
| 13 | சந்திரமதி | 259 |
| 24 | சுப்ரமண்ய பாரதியார் | 479 |


## தமிழ்ப் பாடம்.

நளவெண்பா—சுயம்வர காண்டம்


1 செய்யுள் 1—3 .... ஊடல் 3
2 ,, 4 அணி என்பதன் பொருள். ஒழித்துக் காட்டணி ... 23
3 ,, 5-7 உயர்வு நவிற்சியணி. ஆகுபெயர். எச்சவினை ... 43
4 ,, 8 அடைமொழி. எச்சவினை. வினையெச்சத்தின் பொருள்கள், வாய்பாடு, 63
5 ,, 9-10 உருவகவணி, உவமையணி, குணவாகுபெயர், இட ஆகுபெயர், உவமையாகுபெயர், கால்நிலம், வினையெச்சம் 83
6 ,, 11-15 காவிய இலக்ஷணம், அடைமொழி உவமையணி .... 108
7 ,, 16-19 குணவாகுபெயர், உவமையாகு பெயர், இடவாகு பெயர் ... 124
8 ,, 20-22 உருவக அணி-முற்றுருவகம், தொகையுருவகம். விரியுருவம், உருவக வுருகம். தற்குறிப்பேற்ற அணி 143
9 ,, 23-26 உவமையாகுபெயர். செய்வான் வாய் பாட்டு வினையெச்சம் ... 168
10 ,, 27-33 இடைச் சொல்லின் இலக்கணம்.-கொல் ஓ. செய்யா என்னும் வாய் பாட்டு வினையெச்சம் ... 187
11 ,, 34-35 சொல்லிலக்கணம் பெயர், வினை, வினைமுற்று. அன்மொழித்தொகை. பான் வான் ஈற்று வினையெச்சம் 209
12 ,, 36-40 எழுத்து ஓரெழுத்தொருமொழி 223
13 ,, 41-48 விரோத அணி. எடுத்துக்காட்டுவமையணி ... 243
14 ,, 49-53 வினையாலணையும் பெயர் 263
15 ,, ஷேக்ஸ்பியரும் புகழேந்தியும் 287
16 ,, 54-68 உவமையாகுபெயர் 306
17 ,, 69-82 போலி ... 329
18 ,, 83-90 உள்ளுறை யுவமம் உருவகவணி 351
19 செய்யுள் 91-94 சொல்லிலக்கணம் இடைச்சொல்லின் பொருள்கள், ஒழியிசை, ஐயம்சிறப்பு, இழிவு, எதிர் மறை. கொல், வினைப்பொருள். ஒழிப்பணி ... 363
20 ,, 95-106 இடைச்சொல் ஓ, இரக்கப் பொருள் செய்யும் வாய்பாட்டு வினைமுற்று ... 386
21 ,, 107-113 உருவெளித் தோற்றம்... 403
22 ,, 114-119 வினையெச்சம், உடனிகழ்ச்சி. இடவாகு பெயர். ஏகார இடைச்சொல், தேற்றப்பொருள். உருவக அணிக்கும் உவமையணிக்கும் வேற்றுமை ... 425
23 ,, 120-139 தொழிலுவமை, பயனுவமை, பண்புவமை, தொகையுவமை, விரியுவமை. ஓ இடைச்சொல், பிரிநிலை. ஏ இடைச்சொல், தேற்றம், பிரி நிலை. ... 443
24 ,, 140-151 சிலேடையணி. பின் வரு நிலையணி. ... 463
25 ,, 152-160 தற்குறிப் பேற்றவணி, பொருள், ஏது, பயன். இடைச்சொல், உம். சிறப்பு, எண், எச்சம். ... 484

Reg. No. M. 2324.

## — சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நே:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று திறுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், சப்ளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினால் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலந் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

— தேகபலம் —

## :: புத்திர சந்தானம் ::

இவைகளையுடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்ரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.

இனும்! காம சாஸ்திரம் இனும்!

கேட்போருக்கு இனுமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

## : : இராமாயண வினு விடை : :

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. எழு காண்டங்களும், அரிய நீதிகளும் தெளிவுவாய்ந்த அனுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)**

m 211, N 2 8 K.N
N 32.5.25